உ

திருச்சிற்றம்பலம்.

திரிசிராமலைப் புராணமாகிய

செவ்வந்திப் புராணம்.

சைவ. எல்லப்பநாவல ரவர்கள்

இயற்றியது.

இஃது

திரிசிரபுரம். மகாவித்வான் ம-ா-ா-ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்

பிள்ளை யவர்களால் பரிசோதிக்கப் பட்ட

பிரதிக்கிணங்க

திருமயிலை. வித்வான்-சண்முகப்பிள்ளை யவர்களால்

பார்வையிடப்பட்டு

திரிசிரபுரம்.

ஸ்ரீதாயானசெல்வருக்கடிமைபூண்டொழுகும்

வீ. சண்முகப்பிள்ளையினது

வேண்டுகோளின்படி,

திரிசிரபுரம். புத்தகவியாபாரம்

தி. சபாபதிப்பிள்ளை யவர்களால்


பு. அப்பாசாமிமுதலியாரது,

சென்னை:

மீனாட்சியம்மை கலாநிதி

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1887.



உ

திருச்சிற்றம்பலம்.

ஆளுடையபிள்ளையார் அருளிச்செய்த

தேவாரப்பதிகம்.

(திருச்சிராப்பள்ளி—பண்—குறிஞ்சி.)

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத்தீயதில்லானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாததிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிருமே.

கைம்மகவேந்திக்கடுவனொடூடிக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே. (உ)

மந்தம்முழவம்மழலைததும்பவரைநீழற்
செந்தண்புனமுஞ்சுனையுஞ்சூழ்ந்தசிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள்சடைமேலுடையார்விடையூரு
மெந்தம்மடிகளடியார்க்கல்லலில்லையே. (௩)

துறைமல்குசாரற்சுனைமல்குநீலத்திடைவைகிச்
சிறைமல்குவண்டுந்தும்பியும்பாடுஞ்சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன்கனலெரியாடுங்கடவுளெம்
பிறைமல்குசென்னியுடையவனெங்கள்பெருமானே.

கொலைவரையாதகொள்கையர்தங்கண்மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச்செற்றனரேனுஞ்சிராப்பள்ளித்
தலைவரைநாளுந்தலைவரல்லாமையுரைப்பீர்கா
ணிலவரைநீலமுண்டதும்வெள்ளைநிறமாமே. (௫)

வெய்யதண்சாரல்விரிநிறவேங்கைத்தண்போது
செய்யபொன்சேருஞ்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
தையலோர்பாகமகிழ்வர்நஞ்சுண்பர்தலையோட்டி
லையமுங்கொள்வராரிவர்செய்கையறிவாரே. (சு)

வேயுயர்சாரற்கருவிரலூகம்விளையாடுஞ்
சேயுயர்கோயிற்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
பேயுயர்கொள்ளிகைவிளக்காகப்பெருமானார்
தீயுகந்தாடறிருக்குறிப்பாயிற்றாகாதே. (எ)

மலைமல்குதோளான்வலிகெடவூன்றிமலரோன்றன்
றலைகலனாகப்பலிதிரிந்துண்பர்பழியோரார்
சொலவலவேதஞ்சொலவலகீதஞ்சொல்லுங்காற்
சிலவலபோலுஞ்சிராப்பள்ளிச்சேடர்செய்கையே. (அ)

அரப்பள்ளியானுமலருறைவானுமறியாமைக்
கரப்புள்ளிநாடிக்கண்டிலரேனுங்கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேயவார்சடைச்செல்வர்மனைதோறு
மிரப்புள்ளீருமையேதிலர்கண்டாலிகழாரே. (கூ)

நாணாதுடைநீத்தோர்களுங்கஞ்சிநாட்காலே
யூணாப்பகலுண்டோதுவோர்களுமுரைக்குஞ்சொற்
பேணாதுறுசீர்பெறுதுமென்பீரெம்பெருமானார்
சேணார்கோயில்சிராப்பள்ளிசென்றுசேர்மினே. (ய)

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. (யக)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஆளுடைய அரசு

அருளிச்செய்த

திருச்சிராப்பள்ளி திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மட்டுவார்குழலாளொடுமால்விடை
யிட்டமாவுகந்தேறுமிறைவனார்
கட்டுநீத்தவர்க்கின்னருளேசெயுஞ்
சிட்டர்போலுஞ்சிராப்பள்ளிச்செல்வரே. (க)

அரியபன்றலைவெட்டிவட்டாடினா
ரரியயன்றொழுதேத்துமரும்பொருள்
பெரியவன்சிராப்பள்ளியைப்பேணிவா
ரரியயன்றொழவங்கிருப்பார்களே. (உ)

அரிச்சிராப்பகலைவராலாட்டுண்டு
சுரிச்சிராதுநெஞ்சேயொன்றுசொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை
நரிச்சிராதுநடக்குநடக்குமே. (௩)

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனாரெனநம்வினைநாசமே. (௪)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

ஐயடிகள்காடவர்கோனாயனார்

அருளிச்செய்த

க்ஷேத்திரத் திருவெண்பாவில்

திரிசிராமலை.

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
யொழிந்த துடலிரா வண்ண-மழிந்த
திராமலையா கொண்டுபோ வென்னாமுன் னெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.

திருச்சிற்றம்பலம்.





சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திரிசிராமலைப் புராணம்

என்னும்

செவ்வந்திப் புராணம்.

பாயிரம்.

கலிவிருத்தம்.

அருளெனுங் கடன்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை யுதவுசெவ் வந்தி யானையின்
றிருவடி யிணைமலர் சென்னி சேர்த்துவாம்.

செவ்வந்தீஸ்வரர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சொற்கொண்ட கிளியனையா ளனங்கனுக்குத் துணை யாகத் துணைப்பு ரூர, விற்கொண்டு விளையாடுந் திரிசிரா மலையிலுறை விமலன் றன்னைப், பொற்கொண்ட நிறத் தானுங் கரியமுகி னிகர்வானும் புலரா வண்ண, மறற் கொண்ட மிடற்றுனைச் செவ்வந்திப் பெருமானை யகத் திற் சேர்ப்பாம். (க)

கலிநிலைத்துறை.

துரிசி ராமலை யடைந்திட வேண்டியே துதிக்கும்
பரிசி ராமலை வயற்கணே கயற்கணம் பாய
மரிசி ராமலை மதனிரு கணைகளால் வயங்குந்
திரிசி ராமலை யிறையவர் மலர்ப்பதஞ் சேர்மின். (உ)

மட்டுவார் குழலம்மை.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பனிகொள் வரையிற் பிறந்தபிடி பரனு ரிடத்திற் படர்ந்தகொடி, முனிவ ரிமையோர் மகிழவற முப்பத் திரண்டும் வளர்த்தருளும், வனிதை வடிவே லனைப்பயந்த மடந்தை மட்டு வார்குழலா, ளினிய பதமா மிருபோதுந் தலைமேற் றரிப்பா மிருபோதும். (௩)

தல விநாயகர்.

கலிநிலைத்துறை.

மருப்ப தாமெழுத் தாணியா லாயிர மாற்றுப்
பொருப்ப தாந்தனி யேட்டிலே பாரதப் பொருளை
விருப்ப தாம்படி யெழுதிய கரிமுக விமலன்
றிருப்ப தாம்புய மலரினை யிறைஞ்சுவாஞ் சிரத்தால்.

முருகக் கடவுள்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஓகையாற் றிரைமுன் னுளி லுழக்குமா வினையும் வாட்டு, மேகவெவ் வரையி னெல்லை யிடித்திடு மிமையோர்

போற்றத், தோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி, வாகையே சுமக்கும் வேலை வணங் குவ தெமக்கு வேலை. (௫)

ஆளுடைய பிள்ளையார்.

கலிநிலைத்துறை.

வண்டகத்தே குடைந்தூத முறுக்க தடைந்து வா ய்திறந்து, தண்டகத்தே மதுவொழுகி வழியுங் கமலத் தார்ப்புயத்தான், கண்டகர்க்கே விடமாகி யடியார்க் கமு தாங் கவுணியன்றன், முண்டகத்தாண் மலர்தலைமேன் முடித்தே னிந்தூன் முடித்தேனே. (௬)

ஆளுடையவரசு.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

புத்தியற் றிருக்கும் பொய்யர் புறச்சம யத்தை நீங் கிச், சத்தியப் பொருளை யோர்ந்து தலைவனை யறிந்து சைவ, பத்தியிற் கனிந்த ஞானப் பழத்தினை யொருக ற்றூணு, லத்தியைக் கடந்த நாவுக் கரசினை வணங்கு வோமே. (௭)

ஆளுடையநம்பி.

வேறு.

தீங்கும் பெருமா நிலத்திடருந் தீரத் தீரத் திரைக்க டலிற், றூங்கும் பெருமா ளுடன்வேதன் றுதிக்கும் ப டிக்குச் சுடர்க்கிரியா, யோங்கும் பெருமாள் புகழ்பாவி

யோரா யிரம்பொ னொருமொழிக்கு, வாங்கும் பெருமா
ள் சவுந்தரியப் பெருமாள் பதத்தை வணங்கிடுவோம்.

ஆளுடையவடிகள்.

கொச்சகக்கலிப்பா.

தேனூறும் வாசகங்க ளறுநூறுந் திருக்கோவை
நானூறு மமுதூற மொழிந் தருளு நாயகனை
வானூறுங் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை யிருபோது மிறைஞ்சிடுவேன்.

சேய்ஞலூர்ப்பிள்ளையார்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மணத்தாது செறிமலருஞ் செழுங்கனியுங் கொணர்
ந்துசிறு மணலை வாரி, யணைத்தாதி சிவன்வடிவா யமை
த்தருளி யவற்கினிதா வாட்ட வேண்டிக், கணத்தாவின்
பால்கறந்து நிறைத்துவைத்த கலசமெலாங் கவிழ்த்த
தாதை, யிணைத்தாளைத் தடிந்திறைவர் துணைத்தாளை
யடைந்தவர்தா ளிறைஞ்சு வோமே. (ம)

அவை யடக்கம்.

வேறு.

நாவலந் தீவிற் கிட்டா நவமணி பொதிந்து வைத்த
மேவருங் கிழியு மந்த மணியுடன் விரும்பு மாபோற்
பாவருங் குற்றமாமென் கவிதையின் பழுதும் பாரா
தியாவருங் கொள்வ ரீசன் பெயரதி லிருக்கை யாலே.

பாயிரம் முற்றிற்று. ஆக திருவிருத்தம் - கக.

சிவமயம்

திருமலைச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

எலிக்க ராவெயிற் கவிகையாப் படத்தினை யெடுக்கும்
புலிக்க ராகமா யருளினாற் பசுவினம் பொருந்தும்
வலிக்க ராசல மடங்கலுக் குணர்வினை வழங்கும்
கலிக்க ராமுது கேறிமான் புனலினைக் கடக்கும். (௧)

வன்ப தாகமுட் பிடித்திடுங் கவரியின் மயிரை
யன்ப தாகவே விடுக்குமை வாய்விலங் கினைத்து
மின்ப தாகவே புலிமுலைப் பாலுணு மிரலை
புன்பு லாலுண நகமுடை விலங்குடன் புட்கள். (௨)

சலம ருந்தியும் வாயுவை யருந்தியுஞ் சருகிற்
சிலவ ருந்தியும் பச்சிலை யருந்தியுந் திங்க
ணிலவ ருந்தியு மைங்கன லிடையிலே நின்றும்
பலவ ருந்தியுந் தவம்புரிந் திடுமவர் பலரால். (௩)

காலெ லாமரா வடுத்தவன் மீகமேற் கமழ
மாலை மார்பெலாங் குடலைபோல் வல்லரி மறைக்க

வேல மார்தரு குஞ்சிமேற் குருவிகூ டெடுக்க
பால லோசன னருள்பெறத் தவஞ்செய்வார் பலரால்.

மேதை மேலருக் கிசன்மேல் விடகலை விந்து
நீ தியாகிய வருத்தசந் திரிகைமே னிரோ தி
நாத நாதமேல் சத்திக ஞன்கின்மே ஞல்வர்
பாத மேற்பரங் கண்டுவாழ்ந் திருப்பவர் பலரால். ()

அத்த கைப்பெறு மாச்சிர மத்திலோ ரருகி
னித்தி லப்புது மணலின்மேற் பெருந்தரு நிழலிற்
பத்தி யிற்பொலி நவமணி வேதிகை பண்ணிச்
சித்தி ரச்சிறு புலியதண் மெல்விரி செறித்து. (சா)

வைத்த வாதனத் திருந்தனன் சடை முடி மார்பங்
கைத்த லங்களங் காதினிற் கண்டிகை கமழ
வுத்த ரியம்வெண் ணிலவெழப் புரிமுந் நூலொளிர
முத்த ரானவர் பணிந்திடக் கோதம முனிவன். (எ)

இருந்த கோதம முனியுடன் மதங்கமா விருடி
யருந்த வம்புரி கோசிகன் பராசர னனந்தன்
பொருந்து காசிப னுரோமசன் புலத்தியன் புலகன்
பரிந்து மற்றுள விருடிக ளனைவரும் பகர்வார். (அ)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வேதநறுங் கொடிபடருங் கொழுகொம்பே யாகமத் தின் வேரோ ஞானப், பாதவமே பரபோக மதுநிறைந் த வானந்தப் பழமே யோக, மா தவமொண் சதானந்த மு

னிவரொனு மணிபிறந்த வனாயே தெய்வக், கோதமனே
கேதமிலா வொருமுதலே நிறைந்தபெருங் குணத்தி னு
னே. (கூ)

கலிநிலைத்துறை.

தொல்லை நூலுள கதையெலாம் விரித்துமுன் சொன்
னீர், வல்லி பாகனுர் தெக்கண கயிலையின் வரவைச்,
சொல்ல வேண்டுமென் றுரைத்திரு மருங்கினுந் துதி
த்தார், நல்ல வாசக மிதுவென வவருட னவில்வான்.

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

தெக்கண கயிலை யென்னுஞ் சிராமலைப் பெருமை யெ
ல்லா, நக்கனுர் குமார ரந்தச் சனற்குமா ரர்க்கு நல்க,
வக்கணஞ் சனற்கு மார ரறைந்தன ரெமக்கு மக்கு, மு
க்கண ரருளினுலே மொழிகுவாம் விரும்பிக் கேண்மின்.

எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

சூதமுனி முனிவரர்க்குப் பரிவாற் சொன்ன
தோற்றமிகு சிவபுரா ணத்திற் கண்டு
கோதமனுர் பலமுனிவர் விரும்பிக் கேட்பக்
கூறியிடுஞ் சிராமலையின் புராணந் தன்னை
யேதமற வடநூலைத் தமிழ்நூ லாக்கி
யினியசருக் கங்களொரு பதினென் றுகப்
போதமிகு திருவிருத்த மைஞ்ஞூற் றைம்பான்
பொருந்திடவிக் கதைவிரித்துப் புகல லுற்றேன்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சிவவடி வாகு மிந்தத் திருக்கதை யறங்க ளாகு
நவமிகு பொருளு மாகு நயந்தபே ரின்ப மாகுந்
தவமுயர் வீடு மாகுந் தவத்தினற் பயனு மாகு [கே.
முவமையின் ஞான மாகு முண்மையி னுணர்ந்த பேர்க்

வருமலைக் கொழுந்தாங் கங்கை மௌலிதென் கயி
லை யென்னுந், திருமலைக் கொழுந்தாய் நின்ற சிவன்க
தை சனனமென்னுங், கருமலைக் கொழுந்தை வாட்டுங்
கதிர்கொடும் பாவப் பஞ்சாம், பெருமலைக் கொழுந்தீ
யென்று லதனலம் பேசலாமோ. (௰௪)

கலி விருத்தம்.

துதித்திடுந் திரிசிரா சொல்லுஞ் சொல்லினன்
மதிச்சடை முடியினன் வரங்கொடுத்தலா
லுதித்திடு மளகையே யொப்ப தாகுமப்
பதிப்பெயர் திரிசிராப் பள்ளி யானதே. (௰௫)

அத்தலந் தனக்கிணை யமரர் நாட்டிலை
யித்தலத் துளதென வியம்ப லாகுமோ
வித்தக விலிங்கமந் தீர்த்த மேன்மையவ்
வுத்தம தலத்தலா லுலகில் வேறுண்டோ. (௰௬)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அப்பதி நினைந்த பேருக் கமரர்தம் பதவி யுண்டா,ம
ப்பதி கண்ட பேருக் கயன்பதத் தடைய லாகு,மப்பதி

தனிலிருந்தா லரியமால் பதவி யுண்டா, மப்பதி தனிற்
பிறந்தா லரனென விருக்க லாமே. (டஎ)

வே று.

அன்ன தான மொருவர்தமக் கந்தப் பதியி னளிப்
பவர்கள், கன்ன தானக் கரிமகவா னெனவே மூலகுங்
காத்தருள்வார், சொன்ன தான முதலாகச் சொன்ன தா
னங் கொடுப்பரொன்று, லென்ன தானங் கரிய தவர்க்
கெல்லாப்பொருளு மெளிதாமே. (டஅ)

வே று.

ஒருவருக் கிருக்கை யீந்தோ ரும்பராய் வாழ்வ ரன்றி
யிருவருக் களித்தா லந்த விந்திர னுவ ரங்கே
மருவுறப் பூசை பண்ண வந்திளைப் பாற வன்பாய்த்
திருமடங் கண்டோ ரந்தச் சிவனவ ராவர் தாமே.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வேதமுங்கண் டிறைஞ்சுசிரா மலைப்புராணம் விளம்
பியசொற் பொருளுடனே விரிப்போர் கேட்போர்,
போதகஞ்சேர் புரந்தரன்போ லுலக மெல்லாம் புரந்
திடுவர் வினைதவிர்வர் புகழுண்டாவ, ரேதமுறு பிணி
தீர்வர் பகையை வெல்வ ரெண்ணின்மைந்த ருண்டாவ
ரிகத்தின் மேலு, மாதவன்சந் திரன்முகுந்தன் பிரமன்
றேவர்க் கரிதான பதத்தினையு மடைவர் தாமே. (உ௰)

கலிநிலைத்துறை.

பருவ மேகலை யிரதிநா யகன்கிளிப் பரியு
மருகி றைந்ததார் முருகவே ணடத்திடு மயிலுங்

திரும ணந்தவன் கலுழனும் பதுமனே திமமு
மிரும ருங்கினுஞ் செறிந்தது கயிலேயோ திமமே.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அளியார் கடுக்கை நறுமலரு மணியார் சுடிகை யாட
ரவும், பிளவார் மதியும் புனைந்தருளும் பெருமா னிருக்
கும் வெள்ளிமலே, வளமார் புவன மொருநூறும் வளைக்
கு மண்ட கடாகமெனு, மிளவோ திமத்தின் பேடை
வயிற் றிருக்கு மண்ட மெனலாமே. (உஉ)

எண்சீர்க் கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்.

சோதி மதியின் பாதி யரவஞ் சூடு சடையன் றோ
டு கமழுங்,காதி லமிர்தம் போல வாசுங் காழி யிறையுங்
கூறு தமிழின், பாத கமலம் பாடு மவர்தம் பாத கமலம்
பாறி யகலும், போது செறியும் போது விரியும் பூவை
மருவும் பூவை மருவும். (உங)

கோடு செறியும் பாணி யவனுங் கோக நகனுந் தே
ட வரியன், றேடு மவரன் பாக விழிமுன் பாக வருவ
ன் றேவ ரிறைகொண்,டாடு மயிலன் காள முகில்கண்
டாடு மயிலன் றுதை சடிலஞ், சூடு மாவ னுடு மொருவ
ன் சோதி மதியன் பாதி மதியன். (உச)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வள்ள லணிந்த விளமதியி னிலவா லந்த வரைச்சுனே
யிற், கள்ளு நெகிழும் பொகுட்டுமலர்க் கமலம் விரியா

காலையினும், புள்ளி யரவஞ் சொரியுமணி விரித்த வொ
ளியாம் பொரிக்கனலின், வெள்ளி யுருகி விழுவதெனப்
பெருகும் வெள்ள வெள்ளருவி. (௨௫)

கலிநிலைத்துறை.

அந்த மால்வனாக் கொருபுடை யடைந்தன ரயன்மா
லிந்தி ராதியர் மருத்துவர் வசுக்கணு விருவர்
சந்தி ராதியர் சித்தர்சா ரணர்கள்விஞ் சையர்க
ணந்தி வாகனக் கடவுள ரிமையவர் நாகர். (௨௬)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

துங்கமழு வுழைதரித்துச் சுரிகைதிரு வனாயார்த்து
ச் சோதி யான, செங்கையிலே பிரம்பேந்திக் கயிலைம
லை காத்தருளுஞ் செய்ய மூர்த்தி, மங்கைபங்க ரவதாரம்
பார்த் தருள்புரிந்து விடுமளவும் வாயின் முன்னே, யங்
கொருதிக் கினிலிருந்தா ரவரவர்தா மிருக்குமிட மறிந்து
தானே. (௨௭)

வே று.

ஆரா தனைகண் முடிவிடம்பார்த் திருக்கு மிமையோ
ர்க் கருகாகப், பாரா மனைத்து மொருமலர்போன் முடி
மேற் றரிக்கும் பணிவேந்த, ரோரா யிரஞ்செம் முடிம
ணிகள் கதிரா யிரம்போ லொளி பரப்ப, வீரா யிரநற்
பிறைபோற்பல் லிரண்டா யிரமு மிலங்கிடவே. ( )

செய்ய கவர்நா விருபாலுஞ் செக்கர் வானச் செயல்
காட்ட, வெய்ய நெடிய வாளெயிற்றி னிருள்போற் சிறி

து விடந்தோன்ற, வைய னடிகண் டிறைஞ்சுமதற் க ணேந்தா னவனே யமரரெலாங், கையி னிறைஞ்சி யிருக் கையளித் திருந்து மகிழ்வாற் கட்டுரைப்பார். (உகூ)

வாயு வான பஞ்சடைத்துத் திருமா றுயிலு மலரணை யே, யாய விடமாம் யாக்கையமைத் தாரு ரணியு மரு ம்பணியே, தாய ருதர மெனவுலகைத் தலையிற் சுமை யாத் தரிப்போனே, தூய பொருளே யுனக்குநிக ருள ரோ வுலகிற் சொல்லாயே. (௩௰)

என்ன வுரைக்க மிகநாணி யொடுங்கு மனந்த னிமை யோர்கள், சொன்ன மொழிக்குத் தாழ்ந்தவுரா பலவு முரைத்துச் சுடிகைமணி, மின்ன நெடிய கயிலைமலை வே ரோடியது போலொர் புடை, மன்ன விருந்தான்சதா க தியு முரைத்தான் பொருத வழுவுரையே. (௩௧)

வேறு.

கண்ணிலா தானைக் கஞ்சிக் கண்ணனென் றுரைப் பார் போல, நண்ணிய செவியிலானைக் காலிலா நடை யினுனை, யெண்ணிய விருநா வானை விடஞ்செறி யெயி ற்றி னுனைப், புண்ணிய விமையோர் சொன்ன புகழ்ச் சிதான் பொய்மை போலும். (௩உ)

அமையவே யுலக மேழுந் தரித்திடு மரசே யென்றென் றிமையவர் முனிவர் கூற விடும்பையா லகந்தை யுற்று, யுமையவ ரேவலாலே யுலகெலாஞ் சுமந்தாய் கூலிச், சு மையவர்சுமப்பதெல்லாம்புகழ்ச்சியோ சொல்லு வாயே.

படுத்திடும் பாயுந் தாங்கும் பணியுமா னதுவோ மே
ன்மை, விடுத்திடின் வலியை யெல்லா வுயிரினும் விர
வி நானே, யடுத்திடா திருக்கி லிந்த வுலகெலா மமை
வ தெங்கே, கடுத்தனை யிறைக்கு நீயோ காப்பவ னெ
னவுஞ் சொன்னான். (௩௪)

என்றலு மனந்தன் கூறு மிமையவர் முனிவர் முன்
னே, வென்றிக ளுரைத்தா யுன்னை விழுங்கினாற் கதி
வே றுண்டோ, பொன்றுவை விடுத்தேன் யானீ திரு
க்கவிப் பொருப்பைச் சுற்றி, நின்றுடன் மறைப்பே
னுன்றன் வலியினா னெகிழ்க்க வென்றான். (௩௫)

கலிநிலைத்துறை.

தேவ ரோபகுத் தறிகவென் சிறப்புமுன் சிறப்பு, மே
வு கென்றெழுந் தனந்தனு மறைத்தனன் வெற்பைக்,
கோவு மின்பமுங் கொழுநனென் றிறைஞ்சுநற் குலத்
துப், பாவு மங்கையர் மனமெனப் புனையறும் படியே.

அரன மர்ந்தநா ளளவிடப் படாதநா ளதனாற், பாவு
வெள்ளியங் கயிலையும் பழகிய படிக்கோ, விருப தங்
கையா னெடுத்தநா ணெகிழ்ந்துள தென்றோ, புனைய
றும்பெரும் புரியினால் வளைத்தது போலும். (௩௭)

பங்க மின்றியே கற்பகத் தருவின்மேற் படர்ந்திட்,
டெங்கு மாய்வளைத் தழுத்திய பெருங்கொடி யெனவு,
மங்க மெங்கணு முருகவே கொழுநனா யணைக்கு, மங்
கை மாரிரு காங்களா மென்னவும் வளைத்தான். (௩௮)

வந்து கால்புகா விடங்களிற் றலைகளை மடுத்துச், சிந்
தை யானதும் புகாவகை மறைத்தனன் சேட, னந்த
வேலையி லமலனை யிமையவ ரடைந்தார், கந்த மார்தரு
சதாகதி யவையெலாங் கண்டான் (ருகூ)

வெற்பெ லாஞ்சிறை யுடைமைபோற் பறந்திட வி
சும்பிற், கற்ப கங்கள்போ னிலத்துள தருக்கண்மேற்
காணச், சர்ப்ப ராசனுக் கிறுதியென் றனைவருந் தளர,
வற்பு தத்தினு லறைந்தனன் வளைத்தன னடர்த்தான்.

கலிவிருத்தம்.

எட்டர விளைத்தன விளைத்தகளி றெட்டு
மட்டதிசை சுற்றின வமைந்தவனா பெட்டு
மிட்டமுறு தண்கடல்க ளேழுமுகி லேழு
மட்டற வளைந்தபுனல் வற்றியொழி வுற்ற. (சுக)

அடுக்கழிவு பட்டபுவ னத்திர ளனைத்து
முடுக்கள்சித றிப்பொரி யிறைத்ததனை யொத்த
கொடுக்குமமிர் தத்தினை யிறைத்துமதி குன்றித்
தடுத்துநெய் வடித்துதறு தட்டினைநி கர்த்தான். (சுஉ)

ஆதவன் வருந்திசை யகன்றுதடு மாறிச்
சோதியு மகன்றது துளங்கவொரு பூதம்
பூதமொரு நாலுநிலை போய்நடு நடுங்கிப்
பேதமுறு கின்றதுயர் பேசவெளி தாமோ. (சுரு)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தக்க பவன னறைந்தீர்த்துச் சுழன்று நடுங்கிச் சலி த்திடவு,மிக்க நகமும் பன்னகமு மசையா திருந்த மேதி னியி, னக்க னமலன் றிருப்பாத மறவா துனைக்கு நா ன் மறையிர், பைக்கு ளடைத்த கனகமொரு காலா ல விழ்க்கப் படுங்கொல்லோ. (௪௪)

வெற்றி யனந்தன் படைத்ததுகண் டயர்ந்து பவன ன் மிகநாணிப், பற்றி யுயிரின் பரப்பையெலாங் கொடு போய்ப் புகுந்தான் பாதலத்தி, னுற்ற வுலகத் துயிர்க ளெலா மசையா திருந்த வோவியம்போ, லற்ற மதுக ண் டருள்புரிந்தா னடியார்க் கெளிய வற்புதனே. (௪௫)

வேறு.

நினைத்திடு நன்மைகூறி நிமலனும் பணியே நீயா, மு னைத்திடும் பணிகே ளென்முன் வினவின னுரக வேந் தன், வனைத்தடம் படத்தினாலே மறைத்தது சிறிது வாங்கித், தினைத்திட வேண்டு மென்று னனந்தனத் திறமே செய்தான். (௪௬)

கலிநிலைத்துறை.

வந்து வாயுவும் வந்துவந் தறைந்தனன் வரையை
முந்தி வேரறப் பறித்தனன் கொடுமுடி மூன்றை
யந்த மூன்றையுங் கொடுநமன் றிசையினி லடைவே
சிந்தி னன்றல மூன்றிலே விழுந்தன சிகரம். (௪௭)

முன்னர் வீழ்ந்திடு சிகரிகா ளத்தியா மொழிவர்
பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலையெனும் பிறங்க

லன்ன தின்பிற கமைந்தது கோணமா வசல
மின்ன மூன்றையுந் தெக்கண கயிலையென் றிசைப்பார்.

வெள்ளி மால்வரை தனினுமன் றிமையவர் விடை
கொண், டுள்ள மானது மகிழ்ந்துதம் முறையுளிற் புகு
ந்தா, ரொள்ளு ருதெதன் கயிலையா மூவகை யிடத்தும்,
வள்ள லார்மலைக் கொழுந்தராய் வடிவமாய் வளர்ந்தார்.

பக்க நாயகம் போன்றன வவையிரு பானு
மிக்க நாயக மானது திரிசிரா விலங்க
றக்க வானவர் தானவர் மானவர் தமக்கு
நக்க ஞாதி லிருந்துநல் வரங்களை நயந்தார். (ருய)

மந்த ராசலங் கடலிலே சுழன்றது மறுகி
விந்த மானது புதைந்தது புவியிலே மிகவு
மந்த மேருவும் வளைந்துவில் லுருவமே யான
தெந்த மால்வரை யிதற்கிணை யாவதென் றிசைத்தான்.

இம்பர் வாழ்வெனுந் தெக்கண கயிலையா மிடத்தி
லம்பு யாசன னசத்திய வினையகன் றதுவுங்
கும்ப மாமுனி நினைத்தது கொடுத்ததுங் குலிசன்
செம்ப னல்வரு தீவினை யகற்றிய திறமும். (ருஉ)

அத்த லத்திலே யுமைசிவ தடமமைத் ததுவுஞ்
சத்த மாதரோ மிருடிகள் கழுகுசஞ் சரிக்குஞ்
சித்தர் சாரணர் திரிசிரா தயாதன் சிறுவன்
பத்தி செய்தது மருச்சுனன் வணங்கிய பலவும், (ருங)

அனும முத்திரா வந்ததுஞ் சூரனு மருக்கன்
பனிம லர்க்கொடு பணிந்ததும் பாதலத் துறையும்
வனிதை மாதர்கள் வணங்கிய மகிழ்ச்சியுஞ் சார
முனிவன் முந்தியுந் தாயராங் கருணையு மொழிவாம்.

திருமலைச்சருக்கம்

முற்றிற்று.

பாயிர முள்பட ஆக திருவிருத்தம்-௬௫.

பிரமதேவன் அசத்தியந்தீர்ந்த சருக்கம்.

கலிநிலைத்துறை.

கோதை நாரியைச் சிலைவடி வாக்கிய குரிசில்
பூத ராதிகட் கரசெனப் பொருப்பினைப் புகல
வேத ஞாதிற் றவஞ்செயுங் கதையினை விரித்திங்
கோது வீரெனக் கோதம முனிவனு முரைப்பான். (க)

முன்ன மேயொரு காரணத் தாலரன் முகுந்த
னன்ன வாகனன் மூவரு மொருதலத் தடைந்தார்
மன்னு மேழிசை நாரத னவ்வயின் வந்தான்
கன்னி பாகனை மாயனைப் பதுமனைக் கண்டான். (உ)

அன்று மூவரைப் பொதுவிலே யிறைஞ்சிநின் றவனு
மின்று நானிறைஞ் சியதிதிற் பெரியவற் கென்று

சென்றுபோயினன் றெளிவிலா மொழியினுற் றிகைத் துன்று வானவ ரானவ ரிருடிக டொகையாய்.(௩) [தார்

கலக நாரதன் வழங்கிய மொழியினைக் கமலத், திலகு வேதியன் றனதென வரிதன தென்றான், மலைவு கொண்டன ரெழுந்தனர் பொருதனர் வலியா, லுலக மெங் கணு நடுங்கின விமையவ ரொளித்தார். (௪)

சோதி யவ்விடத் தேசுட ரிலிங்கமாத் தோன்ற, வேத நாரணர் பயந்தி து வேறென வியந்தார், பாத மீதித ற் களவுதா னிலையெனப் பகர்ந்தா, ராதி யந்தமீ தறிந்தவர் பெரியரென் றறைந்தார். (௫)

பொருவி லாவரி யேனமாய்ப் பாதலம் புகுந்தான், விரைவி னலடி தேடுவா னிசைந்திடும் விருப்பாற், பரவு மோதிம னேதிம மாகிமேற் பறந்தான், கருதி வானினுஞ் செம்பொனுட் டிடத்தினுங் காணன், (௬)

வீர பத்திர புவனமுந் தேடினன் மிசையிற்,பார வித்தியா கலைக்குள புவனமும் பார்த்தான், கார ணத்தினனழற்கொழுந் தெனுமுடி காணு, ஞா ணத்தினன் சிறையெலா முதிர்ந்திளைத் தயர்ந்தான். (௭)

வெய்து யிர்த்தன னிரங்கின னிரங்கிடும் வேலைக், கைதை யிற்பெரு மடல்வர மகிழ்வினுற் கண்டா, னெய்தி யந்தமா மடலினைத் தகைந்துகொண் டெதிரோ, னொய்தி னீவருஞ் செயலினை நுவலுவா யென்றான்(அ)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அங்கே தகையும் பொழுதயனு மன்னந் தனைப்பார்த் தலர்முகத்துச், செங்கே தகையுஞ் சிலமொழியுஞ் சிவனுர் கனகத் திருமுடிமேற், கொங்கே தகையும் படியிருந்து விழுந்தே னிஃதென் குறையென்ன, விங்கே தகையு மோதிமமே யெவனீ வரவேதென்றதுவே. (௯)

என்பே ரயனென் றுணைத்திடுவா ரெழுபூ தலமுமென்செயலே, முன்போர் தினத்தி னெடியவற்கு மெனக்கும்பகையாய் முனிவாகி, மின்போ லெழுமித் தழலிலிங்க முதலீ றிடையே விதிப்பவரோ, வன்போ ரெனவே யெடுத்துரைத்தோந் திருமால் வராக வடிவானன்.

மண்ணிற் புகுந்தே யடிதேடப் பாதா ளத்தின் வகையடைந்தான், விண்ணிற் கிடையே யோதிமமா யெழுந்தேன் மிகவும் விரைவாகிக், கண்ணிற் குறித்தேனெத்திசையுங் காணு துழன்றே னிளைக்கண்டே, னெண்ணிற் பெரிய தழற்றூணின் முடிவே தறிய வியப்பாயே. (௰௧)

என்று பதுமன் மொழிந்திடலு மடற்கே தகையுமினிதுரைக்கு, நன்று மொழிந்தா யித்தூர நடந்த வழியோ ரணுவளவாங், குன்றி னளவுண் டினியேகு நெறிதான் மனத்தாற் குறிக்கரிது, சென்றுதலையிற் புவனமெலா மிந்நா ளளவுந் தேடினையே. (௰௨)

சுத்த வித்தை யீசுரமேற் றுலங்குஞ் சாதாக் கியமெனவுந், தத்துவங்க ளினிமூன்றுண் டவைமே லிருப்

பர் சதாசிவனு,ரொத்த மூர்த்தி சதாசிவத்தின் வடிவா மந்த வொளி யுருவம், பத்தியுடையோர் பாம்பரனு ரருளா லகத்தே பாவிப்பார். (௰௩)

ஆகையாலே யறியவரி துனக்கு முன்னை யளித்தவற்கு, மாகமீது கிளராதே திரும்பா யென்று மடலுரைக்க, வோகை யாகி யயனுரைப்பா னெனக்கோ ருதவி யுளதரியே, தோகைபாகன் முடியையிவ னறிந்தா னென்று சொல்வாயே. (௰௪)

எனக்கே தகையு மிசைந்திடலா லெழுந்த சோதி யிறைசிவந்த, சினக்கோ பமதா யுரைத்திடுவா னிடும்பான்மது திருமுடியை, யனக்கே தனன்கண் டனனென்ன வுரைத்தாய் நமக்கு மாகாமற், புனக்கே தகையே முள்ளுருவாய்ப் போவா யெனவே புகன்றருளி. (௰௫)

விடைக்குன் றுகைப்பான் வெகுண்டுரைப்பா னிதமா யிரமும் வெண்மதிய,மடைக்குங் கமலத் திருப்போனே யாராதனையு மரிதாவாய், படைக்குந் தொழிலு முனக்கொழித்தோ மென்று னயனும் பயந்தயர்ந்தான், சடைக்கொன் றையினுன் றுளிணைமேல் வீழ்ந்தா னெழுந்து சாற்றிடுவான். (௰௬)

வே று.

ஐயனே போற்றி போற்றி யனகனே போற்றி யெட்டுக், கையனே போற்றி கால காலனே போற்றி சோதி, மெய்யனே போற்றி போற்றி விமலனே போற்றி

பொய்யர், பொய்யனே போற்றி போற்றி புண்ணியப் பொருளே போற்றி. (௰எ)

ஆறணி சடையாய் போற்றி யடியவர்க் கெளியாய் போற்றி, யேறணி கொடியாய் போற்றி யிருவினை தவிர்ப்பாய் போற்றி, வீறணி யரவா போற்றி வேலவன் குரவா போற்றி,நீறணி யமலா போற்றி நின்மலா போற்றி யென்றான். (௰அ)

பாபமே புரித லாலே பத்தியே வருத்த வேண்டிச், சாபமேல் வரவே நொந்தேன் றளர்ச்சியுந் துயருந் தீரக், கோபமே தவிர வேண்டுங் குணப்பெருங் குன்றே ஞானத், தீபமே யருளே யென்று திருவடி யிறைஞ்சி நின்றான். (௰கூ)

கலிவிருத்தம்.

முறையென மொழிதலு முனிவு நீங்கியே
பிறைமுடி யண்ணலு மகிழ்ந்து பேசுவான்
மறையவா தெக்கண கயிலை மன்னியே
யிறைநமை வழுத்தின லேகுஞ் சாபமே (உ௰)

தெக்கண கயிலையைச் சேர்ந்த பேர்க்குமுன்
புக்கதீ வினையறும் பொருந்து நற்கதி
யக்கண மாகுமென் றருளிப் போயினன்
முக்கணன் றிரும்பினன் முண்ட கத்தினன். (உக)

அத்திசை முகத்தின னசல மேவிய
மெய்த்திசை விரும்பியே மேவும் போழ்தினி

னத்தின நிறைமழ நாடு தன்னிலே
யத்தர்வாழ் தென்கயி லாயங் கண்டனன். (உஉ)

வே று.

அக்கிரியி னெல்லையணா யோசனை வளைக்கு
மொக்கநில மூழ்கியிடு யோசனைகண் மூன்றுந்
தக்கவொரு யோசனை யுயர்ச்சிதவம் வல்லீர்
மிக்ககிரி யின்பெருமை வேதநிலை போலாம். (உ௩)

வே று.

அந்தமால் வரையினை யங்கம் பூவுற
வந்தனை யாகவே வலஞ்செய் வோர்கடஞ்
சுந்தர மேனியிற் றுகளுக் கெண்ணிரு
ணாந்திடாச் சிவபத நண்ணு வார்களே. (உ௪)

இட்டமாந் திருவினை யிணங்க வேண்டிடி
னட்டமா சித்தியு மடைய வேண்டிடிற்
றிட்டமாப் பரகதி சேர வேண்டிடின்
மட்டலாந் திருமலை வலஞ்செய் வார்களே. (உ௫)

திருமலை தனைவலஞ் செய்த பேரெலாம்
பரகதி யடைவது பகர வேண்டுமோ
வொருபதம் வலஞ்செய வுன்னி யூன்றினு
மரியநா லாம்பத மடைகு வார்களே. (உ௬)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சரியையை யறிந்து மற்றச் சரியையின் வழியே வந்து, கிரியையை விளங்கி யந்தக் கிரியையை முடித்த பி

ன்பு, பரவிய யோக மெல்லாம் படிந்துபக் குவமதாகிப்,
பெருகிய ஞான நேயம் பிறந்திடுந் தவத்தி னோர்கள்.

ஊசியிற் பதத்தை யூன்றி யுணவுடன் விருப்பு நீங்
கி, நாசியின் விழியைநாட்டி நன்கன லேந்து மூட்டிப்,
பேசிய தொழிந்து ஞானப் பெருக்கினின் மூழ்கி யந்தத்,
தேசிகன் றன்னை வைத்த சிந்தைமா தவத்தி னோர்கள்.

மாதவம் புரிய முன்னூன் மாதவம் புரிந்து செய்ய,
பாதிரி குருந்து கோங்கு பாடல ஞாழல் புன்னை, மாத
ளை கமுகு தாழை வகுளமா சினிசெந் தாழை, சூதமே
முதலா யுள்ள பாதவ நெருங்கித் தோன்றும். (உகூ)

பண்பகர் வண்டு பாடப் பரம்பிய சாதி யெங்குஞ்,செ
ண்பக வனங்க ளெங்குந் திகழ்ந்தல ரிறைக்கத் தேவர்,
விண்பொதி கற்ப தாரு மலரினு மிக்கதென்று, நண்புட
ன் மகிழ்ந்து சூடு நன்மலர் வனங்க ளெங்கும். (௩0)

சிங்கமும் புலியு மெண்குந் திரிதரு கலையு மாமா, த
ங்கமு நிறைந்து தம்மிற் பகையற வுறவு கூர, வங்கு
ள கனியுந்தேனு மருந்திவா கரங்க ளெல்லாந், தங்களி
லொன்றோ டொன்று தருக்கிய வியல்பு கூர. (௩க)

செறிதர விளங்குகின்ற தெக்கண கயிலை நாமத், து
றுவனா தன்னைக் கண்டா னுற்றபே ருவகை கூர்ந்தான்,
குறையற மணியின் பொன்னின் குவையுமுன் கன்
டு கொண்ட, வறிஞர்க ணிகரா மென்ன மகிழ்ச்சிவெள்
ளத்தி லாழ்ந்தான். (௩உ)

கலிவிருத்தம்.

எந்தையார்க் கனுதின மிருப்பு மாமலை
சிந்தைநைந் தமரர்கள் செப்பு மாமலை
சுந்தரன் றூதன்முன் சொன்ன மாமலை
கந்தமா மலருறை கஞ்சன் போற்றினான். (௩௩)

கலிநிலைத்துறை.

அந்த வெற்பினல் லுச்சிமேற் கங்கைவந் தணையச், சந்த வெண்பிறைக் கொழுந்தெழுந் தருகினிற் றவழ ச், சுந்த ரத்திரு மலைக்கொழுந் தாமிறை சூடுங், கந்த மாநதி மதியென விளங்குதல் கண்டான். (௩௪)

எந்தை யார்திரு மலைக்கொழுந் தெனமுளைத் தெழு ந்து, வந்த வேலையிற் சிரகிரி யுச்சிமேல் வைத்த, தந் தி மாமுகக் கடவுளைக் குகையில்வைத் தருளுங், கந்த வேளையும் பிரமனெண் கண்களாற் கண்டான். (௩௪)

வணங்கு வார்தமக் கெளியரா மட்டுவார் குழலா, மணங்கொர் பாதியார் மலைக்கொழுந் தானநா ளருகே, யிணங்கி யிம்மலைக் காவலா யிருக்கென விசைத்த, கண ங்க ளாகிய தேசுமிக் கார்தமைக் கண்டான். (௩௬)

கலிவிருத்தம்.

உத்தர கயிலையி னுமைதன் கேள்வனு, ரத்தனுர் வர ங்கொடுத் தருடல் கண்டனஞ், சித்தர்வாழ் தெக்கண கயிலை யாவது, மித்தகை யெனவெடுத் தியம்ப லாகு மோ. (௩௭)

மனமகிழ்ந் தயனுமவ் வரைக்கு நண்ணியே, தனிவ ரை மேற்றிசைத் தடத்தின் மூழ்கியே, சினவிடை யூர் தியைச் செய்ய போதினு, லனவர தமுமினி தருச்சித் தானரோ.　(ங அ)

மலைதனை யனுதினம் வலமுஞ் செய்தொரு, சிலையி டை யருந்தவஞ் செய்து போற்றினு, னலையிடைத் துயில்பவற் கரிய வண்ணலும், விலகரு முமையுடன் விடையிற் ரேன்றினுன்.　(ங கூ)

நின்பெருஞ் சாபமும் வினையு நீக்கினே
மின்புற வுலகெலா மியற்று கென்றலுந்
தென்கயி லாயவிச் சிலையி னுமமு
மென்பெய ராகவே யிசைக்க வேண்டுமால்.　(சய)

பொய்த்துரை பகர்ந்திடும் வினைகள் புண்ணிய
வித்தல நினைத்தவர்க் கேக வேண்டுமே
மெய்த்தவந் தமியனேன் புரிய மேவிய
வுத்தம சிலையுமென் பெயரி னுெங்கவே.　(சக)

திங்களி னுரோகணித் தினத்தின் மூழ்குவார்
மங்கரு வினையெலா மாற்ற வேதகும்
பங்குனி மாதமுட் படிகு வாரொனி
னங்கவர்க் கருங்கதி யளிக்க வேண்டுமே.　(சஉ)

அத்தட மூழ்கிநல் லறுகு மூவிலைப்
பத்திர மிரண்டுநின் பதத்தி லேற்றினுர்

புத்திர செல்வமும் புகழு மேன்மையுஞ்
சித்தியு முத்தியுஞ் சேர வேண்டுமே. (௪௩)

சோமரோ கணியெனும் பெயருஞ் சூட்டிவி
தாமரைத் தடத்தினுக் கென்று சாற்றினன்
மாமலர்க் கோயிலாய் வரங்கள் யாவையும்
யாமளித் தனமென வியம்பி யேகினன். (௪௪)

விதிசிலை நன்மையுந் தடத்தின் மேன்மையு
மதியணி யிறைசிரா மலையைப் போற்றுவார்
கதிபெறு நீர்மையுங் கண்டு கண்களாற்
பதுமனு மகிழ்ந்துதன் பதியி லெய்தினன். (௪௫)

பிரமதேவன் அசத்தியந் தீர்ந்த சருக்கம்
முற்றிற்று.

ஆகச் சருக்கம் உ-க்கு திருவிருத்தம்-கக0.

அகத்தியச்சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இந்தமாக் கதையான் மனமகிழ்ந் திறைஞ்சி
யிருந்தவ ரொழுந்துநின் றுரைப்பார்
நந்துவா ரிதியைப் பருகிய முனிவ
னயந்துதெக் கணதிசை யடைந்து

விந்தமால் வரையைப் புதைத்ததுங் கயிலை
விமலனை யமலனை யிறைஞ்சிச்
சந்தன சலத்தி லிருந்தது முரைப்பா
யெனச்சொலப் புகலுவான் றவத்தோன். (க)

முக்கண னொருநா ளிமகிரிச் சிகர
முகட்டிலே முனிவர்க ளுடனே
புக்குறை தருமப் பொழுதினி லுரைப்பான்
பொருவிலா நாரத முனிவா
தக்கண திசையி னுயர்ச்சியே தென்முன்
றவமுனி யுரைசெய்வான் றலைவா
வக்கணி சடையாய் முன்னம்யான் குமரி
யாடுவா னத்திசை யடைந்தேன். (உ)

விந்தமென் றொருமால் வரைநெறி யிடையே
விளங்கிய ததுதனை வினவின்
மந்தர கிரியைப் பகைத்துமற் றுள்ள
வரைகளை நகைத்துநாற் றிசையி
னந்தர முழுது மடைக்கவு மெழுந்த
தரும்பொருள் விரும்புமங் கனையார்
சிந்தையை யளவிட் டறியலாஞ் சிறிதுந்
தெளிவுறப் படாததன் றிறமே. (ங)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தந்த விலங்கு மடங்கலரா சரபங்கராடி களைமுதலா,
வெந்த விலங்கு மதிலுறையு மழியா மையினு லிராவ

ணனுர், வந்த விலங்கை நிகராகு நமனு டெனலாம் வ ன்கொலையா, லெந்த விலங்க றனைக்காணி லெனக்கும் விலங்க லாய்விடுமே. (ச)

வேறு.

என்றுமறை நாரதனு முனிவனந்த மலையியல்பை யி றைஞ்சிக் கூற, நன்றுமுனி வரனுரைக்கு மலையெழு ச்சி யெனநகைத்து நவில்வான் யாமே, சென்றுமிகை தவிர்த்திடுவ தொன்று திரு மானடந்து சிதைக்கவேண் டு, மொன்றுதமிழ் முனியாலே யடக்குவதொன் றெ னமுனிவற் குரைப்ப தானுன். (ரு)

முன்னமலை தனையடக்கு முனிவரனே நாரதமா மு னிவ னின்று, சொன்னமலை தனையடக்கக் குறிஞ்சிநி லங் கடந்துமலர்ச் சுரிசங் கோடே, யன்னமலை வயற் பழனத் திருநாடு கடந்துதென்பா லடையா யென்முன், மன்னமலை கேள்வனிவை யருளுதலும் பயந்துரைப்பா ன் மலயத் தோனே. (சா)

கலிநிலைத்துறை.

கான வாரிசப் பொகுட்டுறை கடவுளுங் கனகத்
தான வாரியும் வலாரியுந் தெளிகிலாத் தலைவா
ஞான வாரியி லமுதமே கருணைமா நதியே
வான நாடனே யுனைப்பிரிந் தெங்ஙனம் வாழ்வேன்.
செப்பு லாமுலை யுமையிட மருவிய தேனே
கைப்பி லாமது ரங்கொளா நந்தமாக் கனியே

தப்பி லாமறைப் பொருளினுக் களவிடாத் தனியே
யொப்பி லாநினைப் பிரிந்தியா னெங்ஙன முய்வேன்.

எண்பு யத்தினல் லழகுநின் றிருமுகத் தெழிலுங்
கண்க ளிற்பொழி கருணையு மிவளெலாங் காண
மண்கொ ளச்செறி வரையது பொருட்டினன் மயங்கி
விண்பு லத்திடைச் செல்வதோ வெனச்சொலி வீழ்ந்தான்.

அண்ண லிப்படி யிரங்கிய முனிவனுக் கருளி
யெண்ண முற்றிலை மலையினைப் பாதலத் திருத்தி
நண்ணி லப்புறந் திரிசிரா மலையத னடுவே [வோம்.
புண்ணி யத்தினன் மலைக்கொழுந் தாயதிற் பொலி

விந்த மால்வரைத் தெக்கண திசையிலே விளங்கு
மந்த மால்வரைக் கொழுந்தரைச் சிறிதுநா ளருச்சித்
தெந்த மால்வரைத் திரளினுந் தவம்புரிந் திருக்குஞ்
சந்த னுசலத் திருக்கென விடைகொடுத் தனனே.

விட்பு லங்களா லணுகியே விந்தமால் வரையைக்
கட்பு லங்களா லகத்திய முனிவனுங் கண்டா
னெட்ப குந்ததி னளவும்வெள் ளிடையிலா தெழுந்து
முட்பொ திந்திடு புதலினற் செறிந்தது முழுதும்.

கலிநிலைத்துறை.

சீய மங்கதிற் கண்டு திரும்புவ
வாயி ரங்கதிர்ச் செல்வனரும்பரி
பாயும் வெம்புலி கண்டிருட் பாலெழுந்
தூய திங்களின் மானுந் துளங்குமே. (௰௩)

குஞ்ச ரத்திற் குதிக்குங் கடாநதி
நஞ்சு கக்கு மரவொடு நண்ணிடும்
வஞ்சர் பெற்ற வளமென வேபிறர்
நெஞ்சி னுக்கும் புகாத நெறியதே. (0௪)

தாக்க ணங்குறை தாழ்வரை யுள்ளது
நோக்க ணங்கு பயிலு நுனியது
மாக்க ணங்கண் மயங்க நெடுங்கழை
தீக்க ணங்களைச் சிந்திடுந் தீயது. (0௫)

கற்பி லாதவர் கட்டழ கென்னவு
மற்பி லாவர சாள்பதி யென்னவு
மெற்பெ லாநிறை காடிது வென்னவும்
வெற்பை யாவருங் காண வெறுப்பரே. (0௬)

கருவி வான்முகி லார்ப்பன கார்வரை
பொருமி வாய்விட் டிரங்குதல் போன்றது
மருவு மாமுனிக் கஞ்சியம் மால்வரை
யருவி தானு மழுவது போலுமே. (0௭)

செய்கு லைத்தெனத் தேனெகிழ் கின்றன
மெய்கு லைத்த வெயர்த்துளி போன்றன
மைகு லைத்த மரங்க ளசைவன
கைகு லைப்பன போன்றன கார்வரை. (0௮)

வண்ண வெற்பின் மலர்சொரி யுங்கணி
நண்ணு தேற லொழுக்க நனைந்திட

லெண்ணு மிந்திரன் வச்சிர மெற்றிய
புண்ணி லெண்ணெய்ப் பொழிவன போலுமே. (௰௯)

வேறு.

உருமின நிறைதலி னுரக மாமணி
சொரிதலி னலகைவாய் விளக்குத் தோன்றலின்
மருவிய விரவெரி மாங்க ளிற்செறிந்
திரவெனும் பெயருமவ் விடத்தி னில்லையே.

மலையது நெடுமுழை மருங்கெ லாஞ்சிறு
புலிகளுஞ் சியமும் புயங்க ராசியுங்
கலைகளுங் கயங்களுந் துயிலுங் காலையி
னுலகினை யுண்டவ னுதரம் போலுமே. (உக)

நிறைதரு வேங்கையு நெடிய சந்தமு
மறுவற நிறைத்திரு மருங்குந் தோன்றுதல்
குறுமுனி வருமெனக் குவடு முன்புபோற்
சிறைகளை விரித்தெழுஞ் செய்கை மானுமே.

புயற்றிகழ் வரைநடு முழையிற் பொங்கிய
வெயிற்றரா வுமிழ்மணி யிருளை நீக்குத
லுயர்ச்சியின் றடங்குமென் றுருகு மோங்கலின்
வயிற்றிடை கொளுந்திய வன்னி போலுமே.

சித்திரப் பெருங்கழை திறந்து கண்களி
னித்தில மணிகளை நெடிது வீசுதன்
மெய்த்தமி ழகத்தியன் மேவு றுவகை
கைத்தல மெடுத்தெறி கற்கள் போலுமே. (உச)

விஞ்சிய சிகரியின் முடியின் வெள்ளிய
மஞ்சினந் தவழுதல் குதிக்க மாமுனி
யஞ்சுவ னெனத்திரண் டமர ரானவர்
பஞ்சினை யமைத்திடும் பண்பு போலுமே. (உ௫)

எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

அந்த மால்வரை யெந்த மால்வரை
யான தோவென வையமுற்
றிந்த மால்வரை யிந்த மால்வரை
யென்று மாமுனி யெண்ணியே
தந்த மால்வரை யன்று ரித்தவர்
தாளை நெஞ்சு தரித்துவெண்
குந்த மால்வரை சூழு மவ்வரை
யுச்சி மீது குதித்தனன். (உ௬)

ஆர மான வெயிற்றி னர்தன
பார மான தழுந்தியே
மார வேளை நிகர்த்த காதலர்
மார்பின் மீது புதைந்தது
மீர மானநி லத்தி லேமுளை
யெய்தி யிட்டது மென்னவே
பார மாமரு விப்பெ ருங்கிரி
பாத லத்திடை புக்கதே. (உ௭)

அந்த கந்த னிளைப்பி னேடெழு
பாத லத்தி னழுந்தியும்

பன்ன கந்த னிளைப்பொ ழிப்பது
போல நின்றது பார்சுமந்
தின்ன லுற்றவவ் விந்த மால்வரை
யொன்று கூறிடு மெந்தையே
யென்ன குற்றமு னக்கி ழைத்தன
னென்ன தீமை யிழைத்தனன். (௨அ)

வினைசெய் வில்வலன் றம்பியானலன்
வேலை வாரியும் யானலன்
முனிவு செய்திடு நகுடன் யானலன்
முனிவ தேதெனை முனிவனே
யனக னேயினி யான்வ ளர்ந்திடு
காலம் யாதென வருள்செய்வான்
கனக மேருவின் மீள யான்வரு
கால நீவளர் காலமே. (௨௯)

என்று மாமுனி சென்ற போதெதிர்
திரிசி ராமலை யிணையதாங்
குன்று மேற்றிசை யொன்று நின்றது
கண்டு நெஞ்சு கொதித்தெழுந்
தின்று நாமிது வென்று போதுவ
மென்று தாளி லடக்கினு
னன்றி ராவணன் பாத லத்தி
னடங்கு மாறென லானதே. (௩0)

வட்ட மாகிய நேரி மாமலை
பாத லத்தின் மறைந்தபின்

றுட்ட ராமவர் சென்ற பின்பு
துலங்கு மேலவ ரென்னவுங்
கொட்ட மார்கலி போன பின்பு
கொழிக்கு நல்லற மென்னவு
மட்டு வார்குழல் பாக னார்திரு
மலைவி ளங்கி வளர்ந்ததே. (௩௧)

கலிவிருத்தம்.

விண்ணவர் பரவுமவ் விலங்கன் மீதிலே
வண்ணமென் கவரிமா மகிழ்ந்து லாவுதல்
புண்ணிய வரையர மகளிர் புஞ்சமா
யெண்ணருந் திருவல விடுதல் போலுமே. (௩௨)

நீலவட் டச்சிறை விரித்து நீண்மயி
லோலவட் டப்புய லுவந்து லாவுதன்
மாலைவட் டத்தன வரைய ரம்பைய
ராலவட் டங்கள்கொண் டணைதல் போலுமே.

தோமறு சுரும்பினங் குடையத் தூளெழுந்
தாமரை யலர்சுனைத் தடத்திற் றோன்றுதன்
மாமைகொ ளரர மகளிர் பற்றிய
காமரு தூமமென் கலசம் போலுமே. (௩௪)

வேறு.

சென்று கானவ ரிட்ட திணைகளுந்
துன்று நீள்கழை தூவிய முத்தமு

முன்றி லேவன ராசிமு கிழ்த்ததுங்
குன்றின் மேலெழு குன்றென வானவே. (௩௫)

வண்டு சூழ மணிச்சிறு பாறையில்
விண்ட கொங்கலர் மென்கனி வீழ்தலிற்
கொண்டன் மின்னனை யார்குழற் கொண்டையின்
மண்டு செம்பொன் மணியணி மானுமே. (௩௬)

வேறு.

மரகதப் பாறைமேல் வயங்கு மாசுணஞ்
சொரிதரு பலமணி சுடரை வீசுதல்
புரையறு பாசடைப் பொதிந்த பொய்கையி
லரியுண மலர்ந்தசெவ் வாம்பல் போலுமே. (௩௭)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வடத்திலே துயிலுமவன் காணாத சிராமலையை
வலங்கொண் டேத்திக்
குடத்திலே வந்தமுனி தடத்திலே மூழ்கியிறை
கோயின் மேவி
யிடத்திலே யுறையுமுமை யவள்பூசை யிறைபூசை
யியற்றி யேத்த [ன்மிசை
நடத்திலே மகிழ்ந்தபிரான் முனிக்கெதிரே விடையி
நண்ணி னானே. (௩௮)

இடபமிசை வந்தவனைக் கும்பமிசை வந்தமுனி
யிறைஞ்சி யேத்தி
யடிபரவி நெடுமீனக் கொடியானை யெரித்தவிழி
யானே போற்றி

மடலவிழுங் கரியகுழல் கன்னியொரு பாலிருக்கு
மணியே போற்றி
பொடியணியுந் திருத்தோளிற் சிங்கவுரி புனைந்தபரம்
பொருளே போற்றி (௩௯)

கலிநிலைத்துறை.

நீல கந்தரா போற்றியென் றிறைஞ்சின னிமலன்
சால நாம்வரந் தருகுவோ முனையெனத் தவத்தோ
னால மர்ந்தநீ தோன்றிய தொன்றுமே யமையும்
பாலி னுண்டபேர் வேறுமோ ருணவினைப் பாரார். (௪௰)

இத்த லத்தினி லனுதின மிடைவிடா திருந்து
பத்தி யிற்புரி பூசையின் பலத்தினைப் பலிப்பா
யெத்த லத்திலே யிருந்தவ ருனைநினைத் திடினு
முத்த ராம்வர முதவுவா யென்னவு மொழிந்தான். (௪௧)

வரமி யாவையு மப்படி யருளியே மறைந்தான்
பிரம னாரண னறிவுறு தொருதழற் பிழம்பாம்
பரம காரணன் மறைதலு மலைவலம் பண்ணி
யரன தாணையாற் பொதியமால் வரைமிசை யமர்ந்தான்.

ஒருமலைத்தலை யிறங்கிமற் றொருமலை யுடையப்
பொருது மற்றொரு மலைதனை வணங்கிநீள் பொதிய
மருமலைத்தலை யமர்ந்திடுஞ் செயலெலாம் வகுத்தாம்
பொருமலைச்சிற கரிந்தவன் கதையினைப் புகல்வாம்,

அகத்தியச்சருக்கம்

முற்றிற்று.

ஆக சருக்கம் ௩-க்கு திருவிருத்தம் -௱௫௩.

சிவமயம்.

இந்திரச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

முன்னர் நாளிலே யுளனொரு தானவர் முதல்வ
னன்ன வன்பெயர் நினைக்கினு முலகெலா மழியுஞ்
சின்ன பின்னமாய்ப் பொடிபடு மவன்பெயர் செம்பன்
பொன்ன கந்தனைத் திருப்புவன் கதையினாற் புடைத்து

ஏழு வாரியுங் கடப்பனேழ் தலத்தையு மெடுப்ப
னேழு பாதலங் களினுமுட் புகுதுவ னிரவி
யேழு மாவணி யிரதமேற் றிரிகுவ னெங்கு
மேழு நாகமு மேழுமே கங்களு மெடுப்பன். (உ)

வாயு வானவன் விழியிலே வருணனை வகுப்பன்
றேயு வானனந் தன்னிலே பவனனைச் செறிப்ப
ஞயி ரங்கணன் மனத்திலே கனலினை யடைப்பன்
பாயு மூவிலைச் சூலமென் மறலியைப் பதிப்பன் (௩)

ஈம வங்கிபி னிணத்தினை நறுநெயா விறைத்துத்
தாம மானிடர் குடர்களைத் தருப்பையாச் சமைத்து
நாம வென்பினை யிந்தனத் தொகையதா நாட்டி
யோமவேள்விமுன் மடந்தையர் தமைவளாந் துவப்பன்

வெருவி லங்கவன் வேட்டையில் வதைத்திடும் விலங்
கைப், பொருவி றேவர்தம் முடிமிசை யெடுப்பது போ

ருந்தா, னிருடி மார்கண்மேற் சுமத்துவ னேதினு லெ
ன்னின், மருவு மங்கவர் சடிலமே சுமடதாம் வழக்
கால். (ரு)

செம்ப னென்பவன் கொடுமையை யிமையவர் திர
ண்டு,கும்ப மால்வளை யிந்திரன் றன்னொடு கூற, வம்ப
ருமலர்த் தருநீழற் பொருந்திய மகவா, னம்பு ராசியிற்
றுயில்பவற் கவையெலா மறைந்தான். (சா)

இந்த வாசகங் கேட்டலு நெடியவ னிசைப்பான், சிந்
தி யாதுசெல் படைத்துணை யாகயாஞ் செல்வா, முந்தி
யேகென வுளைத்தனன் புகர்ப்புழை முகத்துத், தந்தி
வாகனத் தேறினுன் சதமகன் சமர்க்கு. (எ)

போத காதிக ளுடனிவ னெழுந்தனன் பொருதற்,
கோதி னூரவன் வரவெலா மவுணனுக் கொற்றர், தீதுகா
லமே யிவர்க்கெனக் கனன்றுகண் சிவந்து, யாது தான
வர் தானவர் கணத்தொடு மெழுந்தான். (அ)

குந்த மூவிலைச் சூலம்வா டோமரங் குனிவில், பந்தி
யாகவே நடந்தன தொடர்ந்தன பரித்தேர், தந்தி யாதி
க ணெருங்கின பதாகையின் சால, நந்து காகள முரசு
வான் முழவிவை நரன்ற. (கூ)

கடலி ரண்டுபோ லிருவர்தம் படைகளுங் கலந்த
புடவி நீடுயிர்ப் பொழுதுக ளெனத்துகள் பொலிந்த
வடலே யாயின வுலகமற் றமரு மங்கைப்
படையெ லாமிழந் தேகினு ரிந்திரன் பார்த்தான். (ய)

வான வர்க்கிறை வச்சிர மாகிய மலையைத்
தான வக்கட லளறுபட் டலைவுறச் சலித்தா
னுன் வக்கடல் கொடுத்தது நிணப்பெய ரமிர்தஞ்
சேன மற்றுள வலகையா மிமையவர் தெவிட்ட. (௰க)

செம்ப னென்பவ னும்பர்கோன் களிற்றெதிர் திரு
ம்பிக்,கம்ப மால்களிற் றுச்சிமேற் புடைத்தனன் கதை
யா, லம்பு ராசிநேர் கருநிறத் தவுணன்மே லாக, வும்
பர் நாயக னழுத்தினுன் வச்சிரா யுதமே. (௰உ)

வச்சி ரத்தனைப் பறித்தெறிந் தெழுந்தெதிர் மலைந்து
முச்சி ரத்துவே லெறிந்தன னிந்திரன் முகத்தின்
மெய்ச்சி ரத்தினிற் கதையினுற் புடைத்தனன் விழுந்
பச்சி ரத்தமேற் பறந்தன சிவந்தன பரவை. [தான்

அச்ச மாகிய விந்திரன் றுயரொலா மகற்றிப்
பச்சை மாயனும் படைகளும் வரங்களும் பலித்தான்
வச்சி ராயுதன் செம்பனை வருகென மலைந்திட்
டுச்சி வேரறப் பறித்துவெம் பகையெலாமொழித்தான்

கலிவிருத்தம்.

தானவ ரொறுங்களை தவிர்ந்து போனபின்
வானவ ரொனும்பயிர் வளர்ச்சி யாகிய
வூனமி லிந்திரற் குள்ள மீதிலே
ஞானம்வந் ததுமுதற் பழிக்கு நாணியே. (௰ரு)

வாசவ னிப்படி வருந்து நாளிலே
தேசிகன் குறுகியோர் தெளிவு கூறுவா

ஞசமி றெக்கண கயிலை நாதனைப்
பூசனை புரியினவை பொடிபட் டேகுமே. (லசு)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

என்று மொழிந்தா னிந்திரனு மிமையோர் குருவின் மெய் மொழியாற், சென்று கயிலைச் சிவதடத்திற் படிந்தா னிறையைச் சேவித்தான், குன்றி னிகராய் வருவினையுங் குன்றி யெனவே குன்றியதா, லன்றுமுதலாத் துயர்களைதல் பொன்போ லிலையென் றறிந்தனமே. (லஎ)

கலி விருத்தம்.

துள்ளிய செம்பனைத் தொலைத்த வான்பழி
தள்ளுவான் பொன்னுனைத் திட்ட தன்மையால்
வள்ளலைத் திரிசிரா மலையிற் போற்றினன்
வெள்ளிவெண் கயிலையான் விடையிற் றோன்றினன்.
பொரும்பழி நீக்கினேம் வினையும் போக்கினேம்
விரும்பிய தளித்திட விளம்பு கென்றன
னிரங்கியிம் மலைதொழு மெவர்க்கு மக்கணத்
தரங்தையும் பாவமு மகல வேண்டுமே. (லகூ)

கன்னியிற் பூரணை கலந்த நாளிலே
மன்னிய சிவதட வனத்தின் மூழ்கியே
துன்னிய துரோணவெண் மலரைச் சூட்டுவா
ரந்நிலை சிவகதி யடைய வேண்டுமே. (உல)

இப்படி யிந்திர னியம்பி யேத்தின
னப்படி யாகவென் றரனுங் கூறினன்

மைப்படர் கயிலைமால் வரையி னீங்கியே
கைப்படை யிந்திரன் களிற்றிற் போயினான்(உக)

இந்திரச்சருக்க முற்றிற்று.

ஆக சருக்கம் ச-க்கு திருவிருத்தம்—ாஎச.

தீர்த்தச்சருக்கம்.

கலிவிருத்தம்.

கோதம னிந்திரன் கதையைக் கூறலு
மாதவ ரனைவரும் வணங்கி வாழ்த்தியே
பூதர குமரியப் பொருப்பி லெய்திய
தியாதுகொ லெனமுனி யியம்பன் மேயினான்(க)

முக்கணன் றனையுமை முன்னொர் நாளிலே
மிக்கதெவ் வரையெனத் தனிவி னாவினா
ணக்கனு மிறைவியே நடுவி னெய்திய
தெக்கண கயிலையே சிறப்பென் றோதினான். (உ)

அன்னவா சகஞ்சொல விரும்பி யம்பிகை
யென்னகா ரணமதோ விமய நீங்கியே
புன்னைமா மலர்ப்பொடி பொதிந்து பொன்மலை
வன்னமாந் திரிசிரா மலையை மேவினாள். (ந)

விருப்பினு லவ்விடை முழுக வேண்டியே
பொருப்பெலாந் தேடினுள் பொய்கை காண்கிலா
ளருப்புலா முலையவ ளதனை வேண்டியே
பருப்பதா லயனிரு பாதம் போற்றினுள். (ச)

வெங்கரா சலவுரி தரித்து வெண்பொடி
யங்கரா கமெதன வணிந்து வெண்மதி
பொங்கரா முடிமிசைப் புனைந்த புங்கவா
சங்கரா விதனிடைத் தருக தீர்த்தமே. (ரு)

மச்சமாய்க் கமடமாய் வராக மாகிய
வச்சுதா நந்தனுக் கரிய வண்ணலே
விச்சையாய் நாதமாய் விந்து வாகிய
சச்சிதா நந்தனே தருக தீர்த்தமே. (சா)

ஆதியா னவனரு வான வாணியா
லோதுவான் கங்கைநீ ருனக்கு வேண்டிய
தேதுகா ரணமென விறைவி மூழ்கி யான்
போதினு லருச்சனை புரிய வென்றனள். (எ)

தந்தன மெனச்சொலிச் சடையிற் கங்கையை
யந்தர மிசையினும் விடுக்க வந்நதி
யுந்திய கடலெலா மூர்வ தாமென
வந்தது பிரளய வனம தாகவே. (அ)

சங்கென மிதந்தனன் சலத்திற் சந்திரன்
வெங்கதிர் பங்கயம் போல மேவிய

தங்குள வரையெலாங் கமட மாயின
மங்குலுஞ் சைவல வனங்க ளானவே. (௯)

உலகெலாந் தெரிவுற வூழி காலமென்
றலகிலா வுயிர்களு நடுங்க வாயிரந்
தலையரா வசைவுறத் தறுகட் டீவிழிக்
குலமதா சலம்விழ வதுகு தித்ததே. (௰)

மண்ணிடை யதுவரும் வரவி னுனுதற்
கண்ணினன் மணிவிழிக் கடைசி வந்தது
பெண்ணியல் கங்கையும் பெரிது மஞ்சியே
புண்ணிய தீர்த்தமாய்ப் பொருப்பை யுற்றதே.

அங்கது வடதிசை யருகி லேசிவ
கங்கையென் றொருபெயர் காண நின்றது
பொங்குமத் தடத்திலோர் புறத்தி லேசிவ
சங்கரன் றோன்றினன் சயம்பு வாகவே. (௰௨)

நந்துறை தடத்திலே நவ்வி மூழ்கினண்
மந்தர கிரிதொழும் வரையின் மேவினள்
சந்தத மிப்படித் தவஞ்செய் நாளிலோ
ரந்தணன் போலவே யமலன் றோன்றினன். ( )

வெள்ளிய பஞ்சினும் விளர்த்த குஞ்சியன்
றள்ளிய நடையினன் றளர்ந்து கோலின
னள்ளிய மூப்பின னழகு மேனியன்
றுள்ளிய வெயரின னுகிச் சொல்லுவான். (௰௪)

அனிச்சமுந் திறையிடு மழகு மேனியுங்
கனற்செறி தவத்தினாற் கருக வேண்டுமோ
நினைத்தது தருகுவா னிமல னித்தவந்
தனிச்சிலை நுதலியே தவிர்க வென்றனன். (௬௫)

ஓதிமந் தவத்தினை யொழிந்து சிந்தையில்
வேதிய னருச்சனை புரிதல் வேண்டினாள்
கோதற மாலினி குறிப்பி னல்கினாள்
சோதியு மறைந்துபின் விடையிற் றோன்றினான்.

எற்றினா னெதிர்நடந் திறைவி யெய்தினாள்
போற்றினா ளருந்தவம் புரிந்த வெந்துய
ராற்றினான் றிருமுடி யைந்தி னான்மதிக்
கீற்றினா னவளுடன் கிளத்த லாயினான். (௬௭)

பொருசிலை நுதலியே புகன்ற யாவையுந்
தருகுவ முமையெனச் சயில நாயகி
யுரைசெயு மித்தலத் துள்ள யாவையு
மருவுமென் பெயரினால் வழங்க வேண்டுமே.

ஆதியே யிறுதியே யாதி பூரமென்
றோதிய நாளிலே நவமி யோங்கினாற்
றீதற வேவலஞ் செய்த பேர்க்கெலாஞ்
சோதியே நல்வரஞ் சொரிதல் வேண்டுமே. (௬௯)

பூமழை யிமையவர் பொழிந்து போற்றினார்
மாமலர் முடிமிசை மணத்தை வீசிய

தேமலி மடந்தையைத் தெய்வ நாயகன்
கோமள மட்டுவார் குழலி யென்றனன். (உ0)

விடைமிசை யுலவிய விமல ஞர்தம
திடமிசை யிருந்தன ளிமய நாயகி
சடைமிசைப் பிறங்கிய தாம நாயகி
கடலென வொருசிவ கங்கை யாயினள். (உக)

ஒருதுளி பருகினு லுடலி னேயறு
மிருதுளி பருகினர்க் கின்மை யின்மையா
மருளுடன் றுளிகண்மூன் றருந்தி னுலவர்
கருதிய பொருளெலாங் கரத்திற் கூடுமே. (உஉ)

சிவநதி யெனச்சொலிற் றேவ ராகுவர்
சிவநதி சிவநதி யென்று செப்பினுற்
பவமறும் பலபடப் பகர்ந்த பேர்க்கெலா
மவனியிற் பரகதி யடைத லாகுமே. (உ௩)

தடத்தினை வலஞ்செய்வார் தம்மை வானுல
கிடத்தினில் வலஞ்செய்வா ரிந்தி ராதிய
ரடுத்ததின் மூழ்கியவ் வமிர்தங் கொண்டபேர்
விடத்தினை யருந்திய விமல னுவரே. (உச)

அத்தட மூழ்கினர்க் கலகை நோயற
மெத்திய பகையற வினையின் வேரறப்
புத்திர செல்வமும் புகழும் வீரமுஞ்
சித்தியு முத்தியுஞ் சேர்த றிண்ணமே. (உரு)

நீணிலம் புகழுமந் நீரின் மூழ்கினா
ளாணவ மெனுமுயி ரழுக்க நீங்கிடும்
பாணியி னொருதுளி பயங்கொண் டார்தமைக்
காணலும் பயங்கொளுங் கடிய காலனே. (உசு)

கலிநிலைத்துறை.

சத்த மாதரு மத்தடம் படிந்துமா தவத்தாற்
பத்தி யாலர னருளினாற் பெருநலம் படைத்தார்
சித்தர் சாரண ரிராக்கத ரியக்கர்கந் திருவர்
முத்த ராயினா ரத்தடந் தன்னிலே மூழ்கி. (உஎ)

அரவ மானது மதுகர மானது மந்தத்
திரிசி ராமலைத் தடத்துமுற் றவத்தினாற் செறிந்து
பரவி மாதவம் புரிந்தர னருச்சனை பண்ணிப்
பிரிவி லாதிறை காரணா திபர்பதம் பெற்ற. (உஅ)

கழுகு நாயகன் முன்னமத் தடத்திலே கலந்து
முழுகி நாயக னருளினா லருந்தவ முடித்தா
னழகு நாயகி நாயக னினிதெழுந் தருளி [தான்.
மழைய தாமென வரமெலாம் பொழிந்தனன் மறைந்

எழுவராகிய முனிவரத் தடத்திலன் பெய்தி
முழுகி மாதவ முயன்றுநல் லருச்சனை முடித்தார்
விழைவ தேதென வினவினா னரனவர் விரித்தார்
தழுவி மேனியி லடக்கினான் சலந்தனர் தவத்தோர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நன்றுடையா னெனவுலகோ ரெடுத்துரைக்கு மொ
ருதீர்த்த நவமதாக, வொன்றுளதா யிருக்குமது குண

திசையில் விளங்குமதி லுவந்து மூழ்கிக், குன்றுடை யா னடிதொழுவார் பிறப்பகலு மிறப்பகலுங் கொடு மை தீருந், தென்றிசையிற் றீயதிலா னெனுந் தீர்த்த மளிக்குநெடுஞ் செல்வந் தானே. (ருக)

மனத்தின்வரு வினைகளெலாம் விதிதடத்தா லகலு மன வாக்கினாலே, கனத்தவினை யொழியும்வட திசை யின்வரு கங்கையினாற் காயம் வாக்கா, னினைத்தமையா லடைந்தவினை குணதிசையிற் றடமூழ்கி னீங்கு மிந்த, வெனைத்து மகன் றறம்பெருகுந் தீயதிலா னெனுந்தட த்தி னெய்து வோர்க்கே. (ருஉ)

தீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் ங-க்கு திருவிருத்தம்-உாசு.

திருநகரச் சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இக்கதை பலவு முனிவர்தஞ் செவியி லினியவா ரமி ர்தென விசைத்த, மெய்க்தவு தமனை வணங்கிமா தவர்க ள் வினவுவா ரனகமா தவனே, தெக்கண கயிலை மலைசி ரா மலையாந் திருப்பெயர் படைத்திடு சிறப்பை, முக் கண னருளான் மொழிகவென் றுரைத்தார் முனிவனு மவர்க்கிவை மொழிவான். (க)

கலிநிலைத்துறை.

முன்ப ரக்கருக் கதிபதி யிராவணன் முனிவாய்த்
தென்பு லத்துறை திரிசிரன் றூடணன் கரனே
யென்ப வர்க்கருஞ் சிறப்பளித் திம்மலை யிடத்தின்
வன்பு பற்றிய பகைதடுத் திடும்படி வைத்தான். (௨)

கரனி ருந்துறை கொடுமுடி யவன்பெயர் காட்டும்
பெருகு தூடண னுறையிட மவனது பெயராந்
திரசி ராவதி னுறைதலாற் றிரிசிரா மலையா
மிருவர் பேரொழித் தொருவன்பே ராகவே யிலங்கும்.

தூட ணன்கர னிருவரு மிரும்பகை தொலைத்து
விட ணன்றிருந் தமயனங் கழைப்பவவ் விறலோன்
மாட ணைந்தன ரிராவணன் றனதனு மதியா
லேட ணைந்ததார்த் திரிசிரன் பின்னுமங் கிருந்தான்.

துண்ட வெண்பிறை முடியனை யனுதினந் தொழுது
மண்ட பங்களு நவமணி குயிற்றிய மதிலுங்
கொண்ட றங்கிய கோபுரச் சிகரமுங் குழுமி
யண்ட ரின்புற மயன்சமைத் திடும்படி யமைத்தான்.

தந்தி யீருரி போர்த்தவற் காலயஞ் சமைத்திட்
டந்த மால்வரைக் கீழொரு வளம்பதி யமைத்து
மந்த ராசல மெனும்படி யரமியம் வகுத்துக்
கந்த மாதன வரையென வெயில்களுங் கண்டான். (௬)

பைய ராமணி கோபுரத் தலந்தொறும் பவளத்
துய்ய நீள்கொடி நிகரென விரித்திடு சுடர்க

ளைய னாலயம் வனைஞ்செய விறங்குகற் கமரர்
செய்ய நூலினாற் சமைத்திடு மேனிபோற் றிகழும்.

கலிவிருத்தம்.

கொடிச்சிய ரணிமலர்க் குறிஞ்சி சேரளி
யிடைச்சியர் குழற்றள விதழின் மேவுமே
கடைச்சிய ரெறிதரு கரும்பின் முத்தினாற்
புடைச்செறி கடற்கரைப் புள்ளு நீங்குமே. (௮)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பரவைதான் பொய்கை யாகப் பதுமமே
தாரணியாக
மரையினு ளிதழ்க ளெல்லா மற்றுள
தலங்க ளாக
விரைகமழ் பொகுட்டு செந்நெல் விளைமழ
நாட தாகத்
திருமக ளாகித் தோன்றுந் திரிசிராப்
பள்ளி தானே. (௯)

கலிவிருத்தம்.

காம ரம்பொற் கன்னி மருங்கெலாந்
தாம ரைக்கிடை தண்கயல் பாயுமே
தேம டுத்த கடைசியர் செவ்விய
மாமு கத்தினும் வாள்விழி பாயுமே. (௰)
ஆனு மேதியு மார்தவி லம்புயம்
பானல் சிந்தும் பரிமளத் தேறலாற்

சோனே போன்முலேப் பாலேச் சொரிதலாற்
றேனும் பானு மரு நதண் செய்கவே. (௰௧)

கலிநிலேத்துறை.

முத்தி னஞ்செறி தடமொரு நான்கினு முழுகி
யத்த னின்புற வருச்சனே புரிந்தன னதன்பின்
மெய்த்த வம்பல வியற்றின னங்கவன் மெலிந்தும்
பத்தி சோதனே யறிந்திட விருந்தனன் பரமன். (௰௨)

இன்ன மென்னெதிர் முன்னவன் றோன்றிடா திருந்த
தென்ன காரண மெனச்சொலித் தன்றலே யிரண்டை
வன்னி மீதரிந் தாகுதி கொடுத்தனன் மற்றைச்
சென்னி தன்னேயு மரிந்திடக் காத்துவாள் சேர்த்தான்.

அனேயன் வாளினல் விரைந்துதன் கழுத்தினே யரிய[ன்
நினேயு மெல்லேயில் விடையின்மேற் றோன்றின னிமல
கனக மாமலர் மதுமலர் சொரிந்திரு காத்தாற் [ற்றி.
புனேயு மால்விடைக் கெதிர்நடந் திறைஞ்சினன் போ

ஐம்மு கத்தனே யறுமுகத் தவனேயு மரிய
கைம்மு கத்தவன் றன்னேயு மருளிய கனியை
மும்மு கத்தவ னன்முகன் முதலினேர் முன்னே
யெம்முகத்தினும் பரவினன் பரவியொன் றிசைப்பான்

நாக நாதனே யுனக்குமிந் நகர்க்குமென் னும
மாக வேவரந் தருதியென் றிறைஞ்சின னவனுக்

கேகநாதனு மப்படி யாகவென் றியம்பி
மாக மீதினில் வலிமழ விடையொடு மறைந்தான். ௰சு

திரிசி ராவுமத் தலத்தினை யகன்றவை தெரியும்
பரிசி ராவணற் குரைத்தகன் றிலங்கையாம் பதியி
லரசு போனபின் கதியடைந் தனனென வறைந்து
முரசி ராகவ னருச்சனை புரிந்தது மொழிவான். (௰எ)

திருநகரச்சருக்கம்

முற்றிற்று.

ஆக சருக்கம் சு-க்கு திருவிருத்தம். உ௱உரு

நிவனத்தது கொடுத்த சருக்கம்.

கலிவிருத்தம்.

தயரதன் மதலையா மிராமன் றுடகை
துயருறப் பொருதுசா னகியைத் தோய்ந்தபி
னயர்வுறும் பரதனுக் கரசு நல்கியே
கயலுகள் சரயுவைக் கடந்து போயினன். (௧)

சாநகி மயிலுடன் றம்பி தன்னுடன்
கானக மடைந்தொரு கணையி னுலுற
மாநக மடந்தரமுக் கரிந்து மாரிச
மானையு மழித்துவா லியையு மாட்டினன். (௨)

விராவுறு கலந்தனைத் தொலைத்து வேலையைத்
தராதர நிரைகளாற் றடுத்துத் தம்பியோ
டிராவண னுயிர்குடித் திலங்கை வாழ்வினைப்
பராவுறு விடணன் பரிக்க நல்கியே. (ங)

புட்பகத் திவர்ந்துதன் னகர்க்குப் போதுவான்
விட்புலம் படர்தரு பொழுதவ் வெற்பினைக்
கட்புலங் குளிரவே கண்டு போற்றினன்
சட்பதங் குடைந்தெழு தாம மார்பினன். (ச)

இழிந்தனன் சிவதடத் தினிது மூழ்கினன்
பொழிந்தனன் பலமலர் புயலி னீரென
வழிந்தன விழிமழை வணங்கி னன்மிக
மொழிந்தனன் சிவமெனு மூல மந்திரம். (ரு)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மின்வாசி கொண்டசடை யிறைவனே போற்றிசதுர்
வேத மாக
முன்வாசி கொண்டவனே கனலெரிய நின்றுடு
முதல்வா போற்றி
தென்வாசி கொண்டபுரந் திரியநகைத் தருள்பரம
சிவனே போற்றி
பொன்வாசி கொண்டவனே வெள்ளிமலை யுடையானே
போற்றி போற்றி. (சா)

கலிவிருத்தம்.

பூசனை புரிந்தவன் புகழுங் காலையி
லீசனும் பலவா மீந்து போயினன்

கோசல மெனுந் தலங் குறுகி ராகவன்
வாசவன் மகிழ்வுற மகமி யற்றினன். (எ)

ஒரு தல மிறந்தவர்க் குறுதி நல்கிடு
மொருதலம் பிறந்தவர்க் குதவு நற்கதி
யிருதலந் தம்மினு மெய்தும் யாவையுந்
தருதல மிதுவலாற் றரையி னில்லையே. (அ)

நாவலந் தீவிலந் நகரை நண்ணியே
தேவரு முனிவரு நாருஞ் சித்தரு
மாவுடன் பறவையு முரக மாதரும்
யாவரும் பரகதி யெய்தி னார்களே. (கூ)

கலிநிலைத்துறை.

ஐந்து பேர்தமக் கொருத்தியே தேவியா மளவில்
வந்து நாரதன் மொழிகுவா னெவ்வொரு வருட
மிந்த மாதினைப் புணருமிவ் வியல்புகண் டெதிர்ந்தோர்
நந்து பூமியை வலஞ்செயத் தகுமென நவின்றான்.

அன்ன நாளினி லருச்சுனன் றருமனோ டவளைக்
கன்னல் வேளுட னிரதிபோ லிருப்பது கண்டா
னின்ன திவினைக் குலகினை வலஞ்செய வெண்ணி
மன்னு நாவலந் தீவிலத் திசையிலே வந்தான். (யக)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஓங்காரனை பூசிக்க காளத்தி யிறையவனை
யுவந்து போற்றித்

தூங்கானை மாடத்தி லகலாமல் விளங்குபரஞ்
சுடரை வாழ்த்தித்
தீங்கானை தனையுரித்த வழுவூர னிருசரணஞ்
சிரத்தி னேற்றிப் [யைப்
பாங்கானைக் காவிலுறை யகிலண்ட வுமையிறை
பணிந்து போனான். (௰௨)

கலிநிலைத்துறை.

நரன ருச்சுன னெனும்பெய ருடைய வனன்கா
வரன ருச்சனை புரிந்தன னமலனு மவற்கு
வரம ளித்தனன் மடந்தையர் பலரையு மணந்து
பரக திப்பய னடைந்தன னெனமுனி பகர்ந்தான்.

அறிந்த பாவமும் வலிகெடு மறிவிலா மையினுற்
செறிந்த வல்வினைக் கடனுமத் தலத்திலே தீரும்
பிறந்த மானிடப் பிறவியிற் பலன்களும் பெறலா
மிறந்த போதினிற் பிறந்தபேர் முத்திபெற் றிருப்பார்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மனுகு லந்தனி லிரவி புங்கவன்
மதலை தந்தரு டயாதன்
றனுச னங்கவ னனுச னென்பவர்
தமது வெம்பகை தவிரவே
கனலி லங்கையி லிடும வன்சொரி
கருணை யஞ்சனை பாலக

னனுமனென்பவன் மலையில் வந்ததி
லரிய நன்புன லாடினன். (௰௫)

மால யன்றொழு வானை நண்பகன்
மாலை கங்குலின் மாலையா
லால யந்தனின் மேவி மஞ்சன
மாதி கொண்டடி பேணினன்
வால சந்திர ரேகை தண்புனன்
மாசு ணந்திகழ் வேணியான்
வேலை நஞ்சணி நீல கந்தரன்
மேவி னன்விடை மீதிலே. (௰௬)

குன்றெ னத்தொழு தனும னின்றன
னிறையு மன்பொடு கூறுவா
னன்று னக்கினி வரம ளித்திட
நவிலு வாயென மொழிகுவா
னென்றன் முத்திரை யுன்றலத்தினி
லெய்த வேண்டுமெ னச்சொன
னன்ற ளித்தன னரிய செல்வமு
மடைக வென்று மளித்தனன் (௰௭)

நினைத்தது கொடுத்த சருக்கம்

முற்றிற்று.

ஆக சருக்கம் எ-க்கு திருவிருத்தம் உ௱௬௰.

சிவமயம்.

சாரமாமுனிச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

என்று கூறினன் கோதம னவன்றனை யிறைஞ்சி
நன்று கூறினை யெனச்சொலி யிருடியர் நவில்வா
ரன்று சாரனென் றொருமுனி தவஞ்செய வதிலே
சென்ற வாறெலா முரைக்கவென் றனர்முனி செப்பும்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பரம யோகி யொருவ னுண்டு
பகரின் முன்னு கத்திலே
பிரம சன்மன் மறைக ணன்கு
மங்க மாறு பேதமுங்
கரத லாம லகம தாக
வுணர்வில் வைத்த காரணன்
வரையில் விறு மிமய மீது
மாத வந்தொ டங்கினன். (உ)

அன்ன யோகி யருமை யான
தவமி யற்ற வமலனு
மின்னு லாவு குன்ற மன்ன
விடையின் மீது மேவினன்

பொன்னு லாவு போது கொண்டு
பரம யோகி போற்றினு
னென்ன வேண்டு மென்ன யோகி
முத்தி வேண்டு மென்றனன். (௩)

இத்த லத்தின் முத்தி யில்லை
யிமய வெற்ப கன்றுகா
சித்த லத்து றைந்த சோம
சன்ம யோகி தேவிதன்
கைத்த லத்தி லமிர்தெ னப்பி
றந்து கண்க ளிக்கவே
பத்தி செய்து நீயு மங்கோர்
பாலனைப்ப யந்தபின். (௪)

மனைது றந்து தெறகி னண்ணி
மன்னு காவி ரிக்கணே
யினிது வீறு திரிசி ராந
கர்க்க ணெய்தி யெம்மையே
நனைகு லாவு பாத லத்து
மலர் பறிந்து நாடொறும்
புனைதி முத்தி யெய்து மென்று
சிவன்மொ ழிந்து போயினுன். (ரு)

அடல மைந்த பிரம சன்ம
னரிய யோக முறையினு
னுடறு றந்து சோம சன்மன்
மகிழ வந்து தித்தனன்

புடைநெருங்கு கலனி றைந்த
புணரி பொங்கு மகரமீ
னிடைநெ ருங்கு பால லைக்குண்
மதியெ ழுந்த தென்னவே. (௬)

சோம சன்மன் மனம கிழ்ந்து
செய்க டன்முடி லைத்தபி
ஞம நாமி சைக்க வேண்டு
மென்னு மெல்லை நாகமேல்
வாய்மை யொன்றெ ழுந்த திந்த
மைந்தன் மாத வத்தினாற்
ரும மார்ப நாமம் வல்ல
சார னென்று சாற்றுமே. (௭)

என்று ரைக்க மனம கிழ்ந்து
தந்தை தாய ரிருவரு
நன்றி யுற்ற சார னென்று
நாம மன்று நல்கினர்
பொன்ற லற்ற கல்வி கேள்வி
புனித நூலு ணர்ந்தபின்
மன்ற லுற்ற கோதை யோடு
மனைய றத்தில் வைகினன். (அ)

வயந்த புண்ட ரீக யாகம்
வாச பேய மாதிய

வியந்த பன்மகம்புரிந்து
மெய்க்க டன்க ழித்தபி
னயந்து நன்ம கப்ப யந்து
துறவ றத்தை நண்ணினன்
பயந்த பால னினிது தன்கு
லத்து நீதி பயிலவே. (௯)

முற்பி றப்பி னியல்ப றிந்த
முனிவில் சார முனிவனுந்
தெற்கி டத்தின் மேவி மிக்க
திரிசி ராம லைக்குள்வாழ்
பர்ப்ப தக்கொ ழுந்த ரான
பரமர் பாத மலரின்மே
லற்பு தத்தி னரிய போது
சொரியும் வண்ண மணுகினன். (ய)

கலிநிலைத்துறை.

கண்ட மட்டிலே யுருகின ளையங்கண்டு, கண்ட
மட்டிலே விடஞ்செறி கடவுளைக் கழுகார், கண்ட மட்
டிலேய் கருங்குழ லிறைவியைக் கண்டான், கண்ட மட்
டிலே யடங்கிடா மகிழ்ச்சியாற் களித்தான். (யக)

பிரம ஞான னகத்தியன் முதலிய பெரியோர், பர
ம யோகிய ரிமையவர் பணிந்திடும் பரனே, காரு மங்
கவற் கிளையவ னிருவருங் காண, விரவி போலவந் தரு
ம்பல முதலிய விறையே. (யஉ)

அனும னென்பவ னருச்சுனன் வணங்கிய வரனே,
யினிய மாதர்க ளெழுவரு மிறைஞ்சிய விறையே,வனை
யும் வார்குழ லுமையவள் வணங்கிய மணியே, தனிய
ரானவர்க் கன்னையே யெனச்சொலித் தாழ்ந்தான். (௰௩)

சிவத டத்திலே மூழ்கியம் மலைவலஞ் செய்து
பவம கற்றிடும் பொருட்டினி தருச்சனை பண்ணி
நவமு றச்செயும் பன்னசா லையினக நண்ணித்
தவமி யற்றினன் வேதவா சாரனுஞ் சாரன். (௰௪)

சாரமாமுனிச்சருக்க
முற்றிற்று.
ஆக சருக்கம் அ-க்கு திருவிருத்தம்-உ௱௩௪.

சூரவாதித்தச் சருக்கம்.

கலிவிருத்தம்.

வாழி யந்த வருந்தவ மாமுனி
தாழ்வ ருங்கதை தன்னை நிறுத்தியே
சோழ னவ்விடைத் தோன்றி யதுமவன்
கோழி மாநகர் கண்டதுங் கூறுவாம். (க)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மண்ணி லழியாப் புகழ்படைத்த மனுவின் குலத்திற்
சனநாத

வண்ணன் மகிழ வவதரித்தா னரசர் சூளா
மணியென்பா [டைவா
னெண்ணெண் கலைகண் முழுதுணர்ந்தா னெழுவிற் ப
ளிவைதெரிந்தான்
பண்ணும் பரியும் பரித்தேரும் பகடுஞ் செலுத்தல்
பயின்றனனே. (உ)

அந்த மகனைச் சனநாத வளவன் புடவிக்
கரசனெனத்
தந்து புலனைந் தையுமடக்கி முயன்றான் யோக
சாதனையை
மைந்த னவனி முழுதினையுந் தளரா தளித்து
மதிக்கவிகை
சிந்து நிழலா லினைப்பகற்றி நடத்தா நின்றான்
செங்கோலே (௩)

எட்டா னைகளுஞ் சுமைதவிர வுரகா திபனு
மிளைப்பகலக்
கட்டா நின்ற வரியகழல் பகைத்தார் முடியிற்
கதிர்பரப்ப
வொட்டா ரளக்கும் பெருந்திறையா லிமையோ ருலக
மூடுருவக்
கொட்டா நிற்க மும்முரசும் புரந்தான் மனுவின்
குலமணியே. (௪)

எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

பொங்க விப்படி யுயிர்பு ரந்தெழு
புடவி தன்னைவ லஞ்செய்வான்

சிங்க ளத்தவர் யவனர் பப்பரர்
சீனர் சோனகர் கேரளர்
வங்கர் குச்சரர் கூர்ச்ச ரத்தவர்
கோச லத்தர் வணங்கவே
துங்க பத்திரி தண்பு னற்சொரி
தூய திண்கரை மேவினான். (௫)

கலிநிலைத்துறை.

அம்பை யின்கரை நுதற்கண னடிபணிந் ததற்பின்
கம்பை யின்கரை யுமையிடத் திறைவனைக் கண்டு
பம்பை யின்கரை யழகிய நாதனைப் பணிந்து
செம்பொ னம்பல வாணனை வணங்கினான் சிரத்தால்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கனலுருவ மாயிருந்தான் மலர்க்கையின்மான் பயந்தக
லுங் கங்கை யாடன்
மனமுருகி வெதும்புமற்றை மலைமானுந் தளருமென்
றே வடிவ மெல்லாம்
புனலுருவ மானவனை யமிர்தகதிர் புனைந்தவனைப் பொ
ருந்துங் கோடி
தினகரனை நிகர்த்தவனைத் திருவானைக் காவானைச் சேவி
த் தானே. (எ)

வெண்ணாவ னிழலானே யகிலாண்ட நாயகியா மேனை
யீன்ற
பெண்ணாவ ளுடனணைக்கும் பெருமானே மாணிக்கப்
பிறங்கல் போலும்

வண்ணவல் லசுரர்புர மெரித்தானே பெருங்கருணை
 வழியா நிற்குங்
கண்ணவல் லணிந்தமிடற் றானேயென் றடிபணிந்து
களித்துப் போனான். (அ)

வே று.

பொன்னி கடந்து சிவகங்கை முதலாந் தடங்கள்
 புடைசூழ
மன்னி விளங்குஞ் சிராமலையின் சிகரக் கொழுந்தை
 மணத்தகுழற்
கன்னி மயிலை விழிகுளிரக் கண்டா னுடலங்
 களிப்புற்றான்
சென்னி வணங்கி யடிபணிந்து நடந்தான் மேலைத்
 திசைதனிலே. (கூ)

வே று.

காவல னின்பொடு மேறிசை யின்புடை கானில்
 வரும்பொழுதார்
மாவுகை யுந்திறல் வீரர்மதங்கய மாவுகை
 யுந்தகையோர்
மேவுதல் கண்டெதிர் சீறியு டன்றழல் வேகமி
 குந்தலைநேர்
கூவியு கைந்தெதி ராகந டந்தொரு கோழிதொ
 டர்ந்ததுவே. (ய)

மேலெழு மண்கிளை யாவிழு மென்சிறை விசுமி
 குந்தெழுகால்

போலெழு மிந்திர ஞாலமெ னும்படி போய்மறை
யுந்தனைமேல்
வாலைய றைந்திடு மோடிவ ருந்திசை மாறிவ
ருந்தனையே
கோலுமி ருஞ்சிறை தாழமு கங்கொடு கோதிவ
கிர்ந்திடுமே. (௰௧)

வே று.

மாங்களி லொளிக்கு மீள வளையிடைக் குதிக்கும்
வீரர்
சிரங்களை நெருக்கும் வாசித் தலையின்மேற் செறியும்
யானைக்
கரங்களி லிருக்கும் பாகர் கவசமே லிருந்து
மேலம்
பரந்தனி லுகையுந் திண்டிற் றடித்தெனப் பறந்து
போமே. (௰௨)

மன்னவன் முனையெல்லா மருண்டதி சயிப்ப
வேழச்
சென்னியிற் செறிந்து சென்னி கவிகைமேற் செறிந்த
போது
பன்னிரு காத்தோன் கோழிப் பதாகையா
ளுகையாலே
யிந்நில வாசுங் கோழிக் கவிகையா னென்ன
வானான். (௰௩)

வேறு.

கோதியாப் பறந்து கவிகையினுங் குதித்துச் சென்னி
குஞ்சரத்தை
யுதையாச் சரண முள்ளமுந்த முகமுள் ளமுந்த
வுள்ளமுந்தப்
புதையாக் குருதி நதிப்படியா மதவா ஊயினும்
பொங்கியது
மதவா ரணத்தைக் கண்டக்கால் விடுமோ மற்ற
வாரணமே. (மச)

கலிவிருததம்.

பார்த்தனர் மன்னரும் படைக்கை வீரரு
மார்த்தனர் படையெலா மதிச யித்தன
கூர்த்திடு கணையயில் பரிசை விற்கொடு
வேர்த்தன ராசனும் விலக்கி னனரோ. (மரு)

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

வலத்தினிற் பறந்து மீள விடப்புறம் வளைந்து
போந்து
நிலத்திடை நடந்து வான முகட்டிடை நெடிது
பாய்ந்து
சலத்தினிற் குதித்து மேகத் தலத்திடை யடங்கி
யைந்து
புலத்தையு மடக்கா யோகி மனமெனப் போயிற்
றன்றே. (மசா)

இத்தல வாசியாலிப் பறவைபோ ரிழைத்த தாகு
முத்தம தலம்யா மிங்கே யுறைவது கரும மென்ற

வத்தலத் தனந்த கோடி யரமிய மாச வீதி
சித்திர மாட கூடங் கோபுரஞ் செய்வித் தானே. (௰எ)

கலிவிருத்தம்.

மன்னர் வீதி நிறைந்தகை மாவின்மேற்
பொன்னி லாமணித் தோரணம் பொங்குதன்
மின்னு மேக மிவையென விண்ணவர்
வன்ன வில்லு வளைத்தது போலுமே. (௰அ)

போத கத்தின் மதநதி போதலின்
மாதர் கண்டு மருண்டு வனமுலைச்
சீத சந்தனத் தாற்கரை செய்ததன்
மீது சென்றுநம் வீதி புகுவரே. (௰கூ)

செம்பொ ருட்குப் பிரிந்திடு செல்வர்க
டம்பு யத்திற் றழுவி மயங்குவா
ரம்பு யத்திரு வன்ன மடந்தையர்
கொம்பு சுற்றுங் கொடிக ணிகர்க்கவே. (உ௰)

தத்தை மார்விளை யாடிய தண்கழன்
முத்தி ராசி புகுந்து முகிற்கிடை
யுய்த்த மாரித் துளியொ டுதிர்ந்திடு
மெத்து மாரி விழுவன போலுமே. (உக)

ஆடு மஞ்ஞை யனைய மடந்தையர்
பாடு மங்கல வள்ளையின் பாடலுந்
தோடு தங்கு சுரும்பெழு சும்மையு
மோடு தேரி னுருளையி னோசையும். (உஉ)

வெங்க ளிற்றின் விரிந்த விரக்கமும்
மைங்க திப்பரி யாலு முழக்கமுஞ்
சங்கொ லிப்பதுந் தாளமி சைப்பதும்
பொங்கொ லிங்கட லேழும் பொருவுமே. (உ௩)

மைய லேற்ற வனங்கொ ளனங்களை
யைய நீக்கி யழைப்பது போலவே
தைய லார்க டமனிபத் தாமரைச்
செய்ய பாதச் சிலம்பு புலம்புமே. (உ௪)

வேறு.

பற்றிய படிகமண் டபத்தின் பாங்கரிற்
சுற்றிய மரகதச் சிகரந் தோன்றுதல்
கொற்றமென் கனகபங் கயத்தின் கோல்வளை
யுற்றவ னுறங்கிடு முததி போலுமே. (உ௫)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நக்கசெங் கமலத் தாது குடைந்ததி
னறவ மாந்தி
யெக்கர்வெண் மணற்குன் றேறி யிருஞ்சிறை
புலர்த்துந் தும்பி
செக்கர்வெண் பிறையை வாட்டுஞ் சிறுநுதன்
மடவார் கொங்கை
மைக்கருங் குவளை மாலை மாலையில்
வைகு மன்றே. (உ௬)

அரவுகொப் புளிக்கு நஞ்சு மமிர்தமு
மொழுகப் பார்வை

முருகுகொப் புளிக்கு முல்லை முகையென
விளங்க மூர
விரவிகொப் புளிக்கும் வெய்யி லிருகுழை
யெறிப்பச் செங்கைக்
குருகுகொப் புளிக்கப் பந்து பயிலுவார்
கோடி பேரே. (உஎ)

பொற்கலா பார மின்னப் புணர்முலைக்
கலன்க ளோங்க
விற்கைமா ரனையும் விற்கும் புருவவில்
விழியம் பேவக்
கற்கொணு மழலை யன்னங் கலாபமா
மயூரஞ் சூழ
நற்கழங் காடிப் பாடு மாதரங்
நகர மெல்லாம். (உஅ)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மூசு வண்டு வாச முண்டு முகிலிடத்து
முரலவே
மாசில் கெண்டை மீனிரண்டு வள்ளை மீது
துள்ளவே
பூசல் கொண்ட வாளி யைந்து பூங்கரும்பு
பொழியவே
யூசலின்க ணுடுகின்ற மாத ரந்த
வூரெலாம். (உகூ)

மழைத வழ்ந்த சிகர கூட மாந கர்க்குள்
வைகினு
னழக மைந்த குங்கு மக்கு ழம்ப ளாவி
யறுபதங்
கொழு தியங்க ராக நங்கி மங்கை மாதர்
கொங்கையா
லுழுத சந்த னந்தி மிர்ந்த வொளிகு லாவு
மார்பினுன். (௬௰)

தபன மண்ட லஞ்செ றிந்த சயில மன்ன
வொளியதா
மிபம டங்க லெழுது செம்பொ னுச லத்தி
லெய்தினு [கை
னபிந யங்கள் பெறுகு ரும்பை யனைய கொங்
மங்கைமா
ருபய செங்கை கவரி வீச வூச லாடு
தாரினுன். (௬௧)

கலிநிலைத்துறை.

தோன்று மிக்கதை நிறுத்திமேற் கதையினைச் சொ
ல்கேன், கான்று தேன்கமழ் வாரிசங் குவளைசெங் கழு
நீ, ரான்ற சண்பகங் குருந்துமல் லிகைதள வனைத்து,
மூன்று காலமு மிறையவற் கணிந்தனன் முனிவன்.

எந்த நாணமக் கிறையவ னருள்செயு மென்றே
புந்தி மேவுற நினைந்துமா முனியுறை பொழுதி

னைந்து மாமுக னேவலா லழைக்க வந்ததுபோன்
மந்த மாருதங் கொணர்ந்தது புதுமலர் மணமே. (௩௩)

இன்ன பூமண மெதுவெனத் தெளிகிலா னிறைவன்
சொன்ன பூமண மிதுவென மனத்தினுற் றுணிந்தா
னன்ன போதினை யரியயற் கரியவற் கணிந்தார்க்
கென்ன பேறரி தென்பெற வருள்செயா னென்றான்.

தானு வானவற் கிம்மல ரணிந்தவர் தம்மைக்
காண வேண்டுமென் றிருந்தன னவன்றுயில் கனவி
னுண ருமட மாதர்தம் வரவெலா நாளை
வேண வாவினுற் றெளியலா மறைந்து நீவினவில்.

மனதி னெண்ணமு முடிந்திடு மெனச்சொலி மறைந்தா
கனவு தீர்ந்தபி னற்றையின் கடனெலாங் கழித்தா [ன்
னினன கன்றவல் விருளிலோர் புறத்தொளித் திருந்தா
பனக நாட்டினு மடந்தையர் நடந்தனர் பரவ. [ன்

மண்ணி னிற்சிவ தடத்தொரு பிலத்து நல்வழியா
னண்ணி யற்புத மடந்தைய ரொழுவரு நடந்து
புண்ணி யச்செழும் போதுடன் புகன்றிடு பொருள்க
ளெண்ணி ரட்டியுங் கொணர்ந்தவந் தருச்சனை யியற்றி.

மின்னை நேருவார் வலஞ்செய்து வணங்கினர் மீண்டார்
மன்னு மாதவ னெழுந்தனர் முன்புபோய் வளைத்தான்
கன்னி மார்களு மதிசய மிதுவெனக் கருதி
யென்ன காரண மிவனமைத் தடுத்தவா றென்றார்.

எண்ணில் காலமா விருட்பொழு திடையிவ ணெய்தி
யண்ண லார்பதந் தொழுதுமீண் டெம்முல கடைவோங்
கண்ணி னுலெமை யொருவருங் கண்டதாக் காணேம்
புண்ணி யாபுகல் யாவனீ யெனமுனி புகல்வான்.

என்ற னுமமுஞ் சாரனென் றிசைப்பரீ திருக்கச்
சென்று மாதவ ரிருடியர் மானவர் தேவர்
நன்றி யாலர னருச்சனை புரிவதே நன்மை
யன்றி மங்கைய ரருச்சனை புரிந்திட லாமோ (சய)

அஞ்சு சுத்தியும் புரிந்துநல் லாகமத் தடைவே
வஞ்சி மங்கையர் பூசனை முடிப்பது வழக்கன்
றஞ்ச லிப்பதே கருமமஃ தடுக்குமி வென்று
னஞ்ச கற்றிய காருட மியற்றிய நாவான். (சக)

உத்த மத்தவ னிவ்வணஞ் சொலவவ ருரைப்பார்
பத்தி பெற்றவர் யாவரும் பணியலாம் பரனைப்
புத்த னூரவ ரறிந்தது சிலகொலோ போதோ
முத்தி பெற்றவ னல்லனோ வேடனு மொழிவீர். ( )

யானை யேமுத லெறும்பது கடையுதா வனைத்தும்
வான நாடனை வழிபட வில்லையோ மலரான்
ஞான முற்றவ ரல்லரோ கிரியையி னடப்போ
ரேனை யோர்க்கெலாம் பத்தியே மூலமென் றிசைத்தார்.

வீர வேல்விழி மடந்தைய ரிவையெலாம் விளம்பச்
சார மாமுனி மொழிவனீ ருரைத்தது தகவே

யிர வன்பினுர்க் கருளுப தேசமு மெய்திற்
சேரு நன்கனி பாலுடன் கலந்திடு செயலாம். (சச)

பரவு கூர்விழி விடத்தினுற் கடிதடப் படத்தான்
மருவு நீண்மணிச் சுடிகையா லரவென வரலா
லுரக நாட்டுறை மடந்தையர்க் கொருபுடை யொப்பீர்
தெரிகி லேனுமை யாவர்நீ ரெனவுரை செய்வார். (சரு)

நாக நாட்டுறை யிறையவன் புதல்வியர் நாங்க
ளேக மாகவே யித்தலத் தெழுவரு மெய்திச்
சோக நீங்கிடப் பாதலப் புதுமலர் தொடுத்துப்
பாக வான்மதி முடியவற் கணிகுவோம் பாவி. (சகூ)

கலிவிருத்தம்.

தத்துவங் கடந்தவர் தாயி னல்லவர்
பத்தருக் கினியவர் பரம யோகியர்
சித்தருக் கெளியவர் திருவி னுயகர்
புத்திரர்க் கரியவ ரென்று போற்றினுர். (சஎ)

கலிநிலைத்துறை.

அரிவை மீரும தருச்சனை யழகிய ததற்கே
குரவர் பாலுப் தேசமு நலமெனக் கூறப்
பாவி நல்லுப தேசநீ ரருள்கெனப் பகர்ந்தார்
தெரிவை மார்களுக் கருளினு னவனுப தேசம். (சஅ)

அடிக ளேயுமக் கடியவர்க் கடியரோம் பதிக்கு, விடை
கொ டேகுவோ மெனச்சொலிப் பதத்தின்மேல் வீழ்ந்

தார், படவ ராவிறை புதல்விய மொழுவனைப் பார்த்துத்,
தொடர்ப தானதன் பிறவியின்வரவெலாஞ்சொன்னான்.

இற்றை நாளிலென் கனவினி லிறையவ னெய்தி
யுற்ற வுங்களைக் காண்பது முதலெலா முரைத்தான்
கற்றை வார்குழன் மடந்தையீ ரவ்வணங் கண்டேன்
சுற்ற மாயினீ ருமக்குநங் கருத்தினைச் சொல்கேன்.

பாத லத்தினீர் கொணர்ந்தவிப் புதுமலர் பலவும்
பூத லத்திலே கொணர்ந்துநல் லருச்சனை புரியி
னேத மற்றிடு முத்தியா மெனவிறை யிசைத்தா
னாத லிற்புது நாண்மலர் வேண்டினே மதற்கா. (௫௧)

உங்க ணாட்டின்யாம் வருகுவோம் வருந்திற முரையீர்
தங்க நாட்டிய நிறத்தினீ ரெனச்சொனான் றவத்தோ
னெங்க ணாட்டினீர் வருகுவ தரிதரி தென்றார் [டியார்.
கொங்கை நாட்டமென் றிரண்டினுங் கொலைசெயுங் கொ

பிலம தாம்வழி யுலகெலாங் கடுவிருட் பிழம்பு
விலகொ ணாநதி யாவது மாசுண விடநீ
ரிலகு மன்னனைக் காணவு மருமையுண் டெவர்க்கு
மலரு மக்குவந் தெய்துமோ வருமையோ வறியோம்.

என்று கூறினர் யாவையு மிறையவ னியற்கை
யன்றி வேறிலை யடியவர் நினைவெலா மளிப்பான்
சென்று போதுமென் றுரைத்தனன் யோகியர் திலக
னன்று நீரொழுங் கருள்கவென் றவருமுன் னடந்தார்.

சிவ.த டக்கனைப் பிலவழி முனியுடன் சென்று
தவமு தற்றனை யொருபுடை நிறுத்தியே தந்தைக்
குவகை யுற்றிடத் தவமுனி வரவினை யுரைத்தார்
பவம கற்றினுன் றனையழை யெனவவர் பணித்தார்.

வந்த மாதவ முனிவனைத் தவிசின் மேல் வைத்திட்
டெந்த மாதவ மியற்றினே னீர்வரவென்று
னந்த மாதவ னுரைசெய்வா னுலகமா மனைத்து
முந்து மல்விகை யரும்பென முடித்திடு முதலே. (ருசு)

வைய முண்டவன் றன்னையுந் தாங்கிடு மணியே
யைய னுடலை விழியினு லருந்துநல் லமிர்தே
மெய்ய தாகவே வியாகர ணங்களை விரித்தோ
யுய்யு மாறுனை யடைந்தன னெனவவ னுரைப்பான்.

வந்த காரியம் யாதென வுரைசெய்வான் மணச்செவ்
வந்திமாமலர் வேண்டியே யிவ்விடை வந்தே
னெந்தை யாயரு ளென்றன னெழுவரு மிசைத்தார்
தந்தை பான்முனி பிறப்புமற் றவன்செயுந் தவமும்.

மாத வத்தனே நறுமலர்ப் புதலைமண் ணுடனே
கோத கற்றியே கொண்டு போதுக வெனக்கொடுத்திட்
டாத வற்கிணை யானசெம் மணிகளு மளித்து
மேதி. னிக்கணே யருச்சனை புரிகென விடுத்தான்.

தன்க ணங்களிற் சிலர்தமை யழைத்திவர் தமக்குப்
பின்பு சென்றிடு மெனச்சொ னவருடன் பெயர்ந்து

மின்கு லாவமு னடந்துநீள் பிலவழி மீண்டு
வன்பி லாமுனி யவையெலாங் கோயின்முன் வைத்தான்

கலிவிருத்தம்.

வரமுனி கொணர்ந்தசெவ் வந்தி மாமுத
றரணியுந் தரணியிற் றருதல் வேண்டியோ
விரிசதிர்க் கரங்களை யூன்றி மேற்றிசை
யிருளுறு பாதலத் திறங்கி யிட்டதே. (சுக)

முகிழ்நகை யிளமுலை முளரி வாண்முகப்
புகரயில் விழியினர் புலவி நீங்கினர்
மகிதல மிசைந்துசெவ் வந்தி வந்ததென்
றகிலமு நிறைந்துசெவ் வந்தி யானதே. (சுஉ)

மேனிறை கங்குலின் விரிந்து வெள்ளிய
பானிறை யுடுக்கணம் பலவுந் தோன்றுதன்
மாநிலம் பாதல மலரைக் காட்டுமுன்
வானமுங் காட்டிய வாறு போலுமே. (சுங)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அட்டமா நாகந் தம்முட் குணதிசை
யரவந் தங்க
ளிட்டமா மிறைவ னீந்த புதன்மல
ரெடுக்கும் போது
கொட்டியே பழுது பார்த்துக் குயிற்றெனக்
கொடுத்த வெள்ளித்
தட்டமா மென்னக் கீழ்பாற் சந்திர
னுதயஞ் செய்தான். (சுச)

கலிநிலைத்துறை.

கோத்த நித்தில மணியென மதியுடன் குழுமிப்
பூத்த மீனெலா மகன்றன விடிந்தது பொழுது
வாய்த்த மாமுனிக் குதவியாய் மகபதி வகுத்த
வேற்ற மானதின் பதலைபோற் கதிரவ னெழுந்தான்.

அந்த வேளையி னொருமொழி யுரைசெய்வா னமல
னிந்த நற்புதன் முதலையிவ் விடத்திலே யிசைத்தா
லந்த நற்புத லொன்றுநூ றனந்தமாய் வளரும்
புந்தி யுற்றநம் மடியர்கைத் தானமே போல. (சுசு)

கலிவிருத்தம்.

அம்மொழி கேட்டபி னதனை யாங்கவன்
மெய்மலை மேற்றிசை யடைய வித்தின
னம்முத லனந்தமா யரும்பி யெங்கணுங்
கொய்மலர் விரிந்துதேன் கொப்பு ளித்ததே. ( )

சிவதடப் புனலினற் றெளிந்த போதுகொய்
துவகையிற் சங்கநீ ரொருங்கு வீசியே
தவமுனி யனுதின மிறைக்குச் சாத்தினன்
கவலையும் பாவமுங் கரந்து போயவே. (சுஅ)

பொறைநிறை தவமுனி புனைந்த தாரின
லறுகணி முடிப்பிறை யழகு பெற்றது
மறுவற வளைந்தசெவ் வந்தி மாலையாற்
பிறையொளி விடுவது பேச வேண்டுமோ. (சுகூ)

கலிநிலைத்துறை.

சார மெய்த்தவன் கதையினை யிடையிலே தடுத்துப்
பார முற்றதோர் கதையினை யுமக்கு நாம் பகர்வோஞ்
சூர வர்க்கனென் றியற்பெயர் படைத்திடு சோழன்
றூர ணிக்கெலா மன்னைபோன் முன்னவ தரித்தான்.

ஏழு மாமுழ வாரணத் துச்சிமே லிருந்தோன்
வாழி குக்குட முயர்த்தொரு மயின்மிசை வருவோ
னூழி மாதவ னெனவுயி ரனைத்தையு மளித்துக்
கோழி மீதினி லிருந்தனன் பெரும்புகழ் குயிற்றி.

அந்த நாளிலோர் தினத்திலே மிருகயாத் திசைக்கு
வந்து கானகத் துலவிநற் றிரிசிரா மலையின்
முந்தி யேகினன் பின்னருஞ் சாரமா முனிவன்
கந்த மார்வனத் தருகினுந் திரிந்தனன் கங்குல். (எஉ)

ஏக வீரனும் வேட்டைகொண் டுலவுமவ் விரவி
னாக கன்னிய ரெழுவரு மவ்விடை நடந்து
பாக நாரிய னருச்சனை புரியமுற் படியே
சோக நீக்கிடு சிவதடங் குடைந்தனர் தொகையாய்.

கலிவிருத்தம்.

யுவதியர் கோதையி லொழுகு தேனினு
லவரவர் கயல்விழி யஞ்ச னத்தினுற்
குவிமுலை யெழுதிய குங்கு மத்தினுற்
சிவதட முழுவதுஞ் சேறு பட்டதே. (எச)

அறுசிர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வேட்டைமேல் விருப்ப மாகிக் கனாமிசை
யுலவும் வேந்தன்
கோட்டுவார் முலையார் மூழ்கிக் குளித்திடுஞ்
செயலை நோக்கி
நாட்டமா யிரங்கள் வேண்டு மெனச்சொலி
நைந்தான் பின்னைக்
காட்டுமோன் கவர்வான் மின்னூர் கலையெலாங்
கவர்ந்து போனான். (எரு)

ஆயமங் கையர்க ளீரொண் ணூயிர
ரன்று வைத்த
தூயமென் கலையை வாரி யொளித்தவச்
சுதனே போலச்
சேயமென் கலைக ளெல்லாஞ் சிருட
னெடுத்துக் கொண்டு
மாயமோ வென்ன மற்றோ ரிடத்திலே
மறைந்து நின்றான். (எசு)

கலிநிலைத்துறை.

கன்னி மார்களு மூழ்கிவந் தேறினூர் கரையிற்
பொன்னின் மேகலை சொரிந்தன பதத்தின்மேற் புனலை
யன்ன மாதரைச் சிவதடப் புனலெனை யகலா
தின்னும் வாருமென் றழைத்தடி பணிந்ததா மெனவே.

வைத்த வெல்லையிற் றேடினூர் கலைகளை மாறு
ரித்த டக்கரை யெய்தியார் கவர்ந்தவ ரென்றூர்

சத்தியம் மிவை கவர்ந்தபேர் தாம்விடத் தழலுக்
கொத்த விந்தன மாவரோ யெனச்சொலி யுளைந்தார்.

இன்று பூசனை விலக்கிய பாவியிங் கெவனே
வென்று கூறிநொந் திரங்கின ரவர்களுக் கெதிரே
குன்று போலிறை நடந்தனன் மடந்தையர் கூட
நின்ற மாசுண மிறைத்தன விடங்களா நெருப்பை.

கடுவி றைத்திடு கனலெலாங் கருடமந் திரத்தாற [ன்
பொடிப டுத்திந் புனலிடைப் புகுந்தவன் போன்று
வடவை யொப்பெனும் விடத்தினைக் கருடமந்திரத்தாற்
றடைப டுத்தின னிவனெவ னெனவதி சயித்தார்.

ஓதி மம்பொரு நடையினர் பயந்துநின் றுரைப்பா
ராதி மன்னனீ யென்பதுன் வடிவின லறிந்தோம்
பேதை வஞ்சியர்க் கிடர்விளைத் திடுவரோ பெரியோர்
நீதி யல்லவு நல்லற மல்லவு நினைந்தாய். (அக)

அலைவ கற்றுவ வுயிரினுக் கழகினை யளிப்ப
வுலகி னுக்கெலா முதவிய மகிழ்ச்சியை யுடைய
கலையெ னப்படு மறுபத்து நாலையுங் கடந்தோ
யிலகு மெங்கலை பறிப்பது நீதியோ வென்றார். (அ௨)

தூம முண்டிருண் டலைதருங் குழலியர் சொல்ல
வூம னென்னவே யுரைசெயா தேகின னூரவோன்
றூம வேலினன் வீரவேள் சூரவா தித்த
நாம னுடிது வல்லவோ வென்றுபி னடந்தார். (அ௩)

சூர வர்க்கனு மொழிகுவான் மடந்தைமீர் சொன்ன
பேரோ மக்குள துமக்குநா னிழைத்தது பிழையோ
வேரோ டுத்தசீ ரொழுவரி லொருவனை யிசையுங்
கார ணத்தினுன் மறைந்துநான் வாரினேன் கலையை.

அன்ன தாகுமென் றவரவர் கலையெலா மளித்துச்
சொன்ன போததற் குடன்படா தவர்களுஞ் சொல்வார்
மன்ன நீயெமைத் தந்தைதாய் கொடுத்திட வரையா
தின்ன வாசகம் பகருவ ததுபழு தென்றார். (அரு)

அரவ நாட்டவர் கடற்புவி யரசருக் காமோ
விருளை நேர்விட மமிர்துடன் சேருமோ வென்று
ரரச னேதுவா னுரகநாட் டவர்மணி யன்றே
விரவி போலவெம் முடியின்மே லிருக்கும தென்றான்.

உங்க ணாட்டிறை யருளினு லுங்களை வரைதற்
கெங்க ணாட்டினின் றும்முடன் வருகுவே னென்றான்
செங்க ணாட்டிய மலரொலாஞ் சிவனடி சேர்த்துத்
தங்க ணாட்டினி லணுகினு ரரசனுந் தாமும். (அஎ)

சூதடுத்தபூண் முலையினுர் தாதையைத் தொழுது
பாத லத்துநின் பெருமையும் வளமையும் பார்க்கப்
பூத லத்தினே ரரசனீங் கணைந்துபூம் பொழிலின்
மீத டுத்தன னெனச்சொல விறைவனும் வியந்தான்.

ஆயி ரம்பணு டவியினுன் வருகவென் றருள
வாயி லாளருங் கொணர்ந்தனர் மனுகுல மணியைக்

கோயில் வாயிலைக் கடந்தவ னுறையிடங் குறுகித்
தூய தாண்மிசைப் பணிந்தன னழகுமேற் றுளும்ப.

அகில மன்னனும் வளவனை யணைத்துவந் தருளி
மகர நான்முகத் தவிசின்மே லமைவுற வைத்துப்
புகரி லின்னமிர் தளாவிய பனிமொழி புகன்றான்
சகல பாரமு மொருவனாத் தலைமிசைத் தரிப்போன்.

அனைய வாசக மவன்சொல வரவநாட் டரசே
புனையு நின்னெழில் காணவும் புகழவும் புகுந்தா
லுனது கண்கள்போ லாயிரத் திரட்டிக ளுளவோ
வினிய நாவுமப் படியெனக் குள்ளவோ வில்லையே.

ஊர்ப ரிப்பவர் நாட்டினை யளிப்பவ ருலகின்
சீர்ப ரிப்பவர் சிறுபுக ழனந்தமாய்ச் சிறக்குந்
தார்ப ரிப்பது நிகரொன மலரினான் சமைத்த
பார்ப ரித்துநின் றளிக்குநின் றகைமையார் பகர்வார்.

அன்ப னேயென மொழிந்தனன் மொழிந்தவற் கனந்த
வின்ப மாகவொன் றாணைசெய்வா னெமதுநா டெங்கு
முன்பு கார்விட நிறைந்ததிப் பொழுதுநின் மொழியாற்
றுன்ப நீங்கியின் னமிர்தமா யினதெனச் சொன்னான்.

விடைகொ டுத்தனன் வளவனும் பெயர்ந்தொரு வீதி
யிடைவ குத்ததோர் மாளிகைத் தவிசின்மே லிருந்தான்
படைம ணிக்கல மமிர்தம்வெண் சாமரம் பளிதந்
தொடைம லர்க்குலஞ் சந்தனம் விடுத்தனன்றொகையா.

இந்தி ரன்பெருஞ் செல்வமா மெனுமவை யெல்லா
மைந்து தன்புல ஞரவே மகிழ்ச்சியா லயின்முன்
வந்து கங்குலுங் கழிந்தது மற்றைநா ளனந்தன்
முந்து பேரவைக் கெய்தினு னனந்தனு மொழிவான்.

அந்த வாரிதி யுலகினு மிறங்கியிங் கருகில்
வந்த காரிய மெதுவென வுரைசெய்வான் வளவன்
முந்து நல்வினை கொணர்ந்தது முனிக்குரீ தருஞ்செவ்
வந்தி நின்புகழ் போலவே கிளைத்தது மண்ணில்.

இன்னு மெங்களுட் டில்லன விரண்டுள குளத்துச், செங்நெல் வெற்றிலை யெனச்சொனுன் மொழிகுவான் சேடன், மன்னர் மன்னவெம் மிடத்தினிற் சிறிதுநா ள் வைகிப், பின்ன ரேகுனக் கவையெலாந் தருகுவோ ம் பெரிதும். (கஎ)

ஈதி ருக்கவென் னுயிர்க்குயிர்த் துணைவனீ யென்றே
யோதி யிப்படி மகிழ்ந்திடு நாளிலே யொருநாள்
பூத லத்திலுன் சேனையெத் தனையுனைப் புணரு
மாத ரெத்தனை பெயரென வுரைசெய்வான் வளவன். ()

ஒங்கு நாற்கட லுடுத்தபா ருலகமென் னுலகந்
தீங்கி லாதவை நிறுத்திவெம் பகையெலாந் தீர்த்துந்
தாங்க வேண்டிய தெத்தனை யத்தனை தானை
பூங்கை மாதரு மிருவரென் மனத்தினைப் போல்வார்.()

காடு நாடெலாஞ் செங்நெலும் பூகமுங் கரும்புங்
கோடு முத்தமுங் கமலமு நிறைந்திடுங் குளங்கண்

மேடை யெங்கணு மிரதிபோன் மடந்தையர் வினேத
மாடல் பாடலுண் டமரர்தே வாலய மனைத்தும். (௱)

மந்த ராசல மெனப்பல களிற்றினம் வயங்குஞ்
சந்த ஞடவித் தலையிலே தடைபடுந் தபனன்
சுந்த ரானன மடந்தைய ரணிமணித் தொகையா
லந்த காரமு மிலையவர்க் கரியது மிலையால். (௱க)

பன்ன சாலையு மறையவர் வேள்வியும் பயிலு
மன்ன தானமே முதலிய தானமு மகலா
மன்ன ரேமுதற் குடிகளும் பலவுள மகவான் [யின்.
பொன்னி ஞடெனப் பொன்னிநா டுளதொரு புடை

அங்க திற்கம லாலயம் வேதவா ரணியங்
கங்கை சுற்றிய வம்பல மம்பர்மா காளம்
புங்க நற்பதி புகலிவெண் காடரன் புகலூர்
மங்க லக்குடி கஞ்சனூர் சேய்ஞலூர் வழுவூர். (௱௩)

வையை யென்றொரு நதியதன் கரையிலே மதுரை
மைய னீக்கிய தலமிரா மீச்சுரம் வடக்கே
யையன் வைகிய வதிகைதென் கோவலூ ரருணை
துய்ய கம்பையிற் காஞ்சியென் றொருதலந் துலங்கும்.

கச்சி மாநகர் தனக்குநேர் வடக்கிலே காசி
பச்சி மத்திலுங் குணத்திலு மருங்கிலும் பலவுண்
டச்சு தன்குகன் கோயிலு நதிகளு மனந்தங்
குச்ச ராதியே முதலிய தேசமுங் கோடி. (௱௫)

பர்ப்ப தங்களும் பலவுள மணிகளும் பலவுண்
டற்பு தங்களும் பலவுள வென்றிவை யறைந்தான்
சர்ப்ப ராசனு மகிழ்ந்துசிங் காதனத் தவிசு
மெற்செ றிந்தசெம் மணிமுத லானவு மீந்தான். (ஈசு)

மற்று மொன்றவற் குரைசெய்வான் மன்னவா வுன்னைப்
பெற்ற தந்தையேழ் பிறவியிற் பெறும்பயன் பெற்றான்
கொற்ற வேந்தர்கள் பலருள ரெனினுமிக் குணத்தைக்
கற்ற வேந்தனீ யன்றிவே றொருவனைக் காணேன்.

கூறு கின்றநின் மொழியினு லுடலெலாங் குளிர்ந்த
வீறு கொண்டநின் னெழிலினு லெமதுகூர் விழிகள்
பேறு கொண்டநீ வருதலா லுலகெலாம் பெறுங்கை
மாறு கண்டிலேன் மருகனீ யாகுதல் வழக்கால். (ஈஅ)

இருவ ருண்டுதோள் புணருதற் கெனவுரைத் திட்டாய்
திருவொ ருத்தியே போதுமோ மார்பகஞ் செறிய
விரிவு மிக்கதன் றேவினு மொருதிரு வேண்டும்
பொருவி லென்மகள் காந்திமா மதியையும் புணர்வாய்.

மன்னர் மன்னனே யெனச்சொனன் வளனுண்மகிழ்வுற்
றென்ன நீபணித் திடினும்பா னியைவதே யென்றான்
பன்ன காதிபன் பணிகளுக் குரைத்தனன் பணிகள்
பொன்னி னுடனைத் தமதுநா டனைத்தையும் புனைய.

சேடர் சேணுயர் வாயிலை நெருக்கினர் தோர
ணாட ரங்கெலாந் தமனிய மணிகளா லமைத்தார்

மாட மாளிகை தொறுமணிக் குடநிரை வைத்தார்
கூட கோபுரம் புனைந்தனர் நேத்திரக் கொடியால்.

இமச லங்களைத் தெளித்துமான் மதப்புன லிறைத்திட்
டமரர் கற்பக வனமெனக் காவள மமைத்துத்
தமனி யத்தனி மண்டபங் கோயிலுட் சமைத்துக்
கமல நாயகி யுறையுளா மெனும்படி கண்டார். (௱௰௨)

அந்த மண்டபந் தன்னிலோ ராதர மமைத்தார்
வந்து சூரவா தித்தனு மிருந்தனன் மதியு
மிந்து மாமதி யெனவொரு புடையமர்ந் திருந்தா
டந்தை யானவன் கொடுத்திட வேற்றனன் றுணை.

ஓம வேள்விமுன் வளர்ந்தனன் வலம்புரி யொலிக்கக்
காம வேளுட னிரதிபோ லிருந்தனன் கலந்து
மாம னங்கவர்க் களித்தனன் றரணியு மணியுந்
தாம வாரமுஞ் சேடியர் பலருமா தனமும். (௱௰௪)

பணிக ளானவை விடைகொடு போந்தன பணிந்து
மணிகு லாமுடி யனந்தனும் புகுந்தனன் மனையிற்
றணிவி லாமயற் காந்தியும் வளவனுந் தழுவி
யணிகொ ளின்பவா ரிதியிலே மூழ்கின ரழுந்தி.

தாரு மாலையு மயங்கிடக் கருங்குழல் சரிய
வேரு முத்தமுஞ் சொரிந்திட மேகலை மிழற்றக்
கூர வேல்விழி சிவந்திட விளர்த்திடக் குமுதம்
வார ருமுலை நாஞ்சிலா லுழுதனண் மார்பை. (௱௰௬)

கலிவிருத்தம்.

முற்றிடை யகன்றன கழன்ற முத்தணி
சிற்றிடை யவளொடுஞ் செறிந்து சூழ்ந்தன
பொற்றொடி யெனுமுழை பிடிக்கப் போர்மதன்
மற்றொரு வலைகொடு வளைத்தல் போலுமே. (எயஎ)

பரிபுர மொருதரஞ் சிலம்பப் பல்கலை
யொருதரம் புலம்புற வுவரி யாகிய
சுரதவிஞ் சையிலவன் றோளிற் றுஞ்சினள்
வரைமிசைப் படர்ந்திடும் வல்லி போலவே. (எயஅ)

கலிநிலைத்துறை.

அன்ன மேயெழு பிறப்பினு முனைப்பிரிந் தகலே
னென்ன வேபுகழ்ந் துரைத்தன னெழுபிறப் பிகந்த
பின்ன ராயினு மென்னைநீ ரகன்றுளம் பிணிக்குங்
கன்னிமாருடன் புணருவீ ரெனச்சொலிக் கனுழ்ந்தாள்.

வாடி னுண்மலர்த் திருமுகங் கருகினள் வருந்தி
யூடி னாளவ னூடலை யுணர்த்தின னுணர்ந்து
கூடி னாரவ ரிருவருங் கலவியிற் குளித்துத்
தேடி னார்தமை யறிகிலா ரிராப்பகல் சிறிதும். (எஉ0)

உருகி யிப்படி முயங்குநா ளினிலவ னுரைப்பான்
முருக லர்த்திரு மடந்தையே யுனதுபூண் முலையா
மிரும ருப்பினு லொசிந்தறு பதஞ்சிறை யிழந்து
மருளி சைக்கொடு தவழ்ந்ததுன் றார்மிசை வண்டு.

இந்த வண்டொரு காலமுன் போலமுன் னிருந்த
நந்த னந்தனி லணையுமோ வுரையென நவின்று

னந்த வாசகம் பிரிவுணர்த் தியதெனவயர்ந்தா
டந்தை பாலவன் குறிப்பையு முணர்த்திஞ டனித்து.

மகளு ரைத்தசொல் விடத்திஞன் மயங்கிய மன்ன
னிகலி ஞலையா னிறுத்துவன் வருந்தனீ யென்று
னிகரி லாதுல களிப்பவ னல்லனே நிருபன்
பகரில் யாஞமங் கவனுடன் செல்வது பரிவால்.

போகி மன்னனும் வளவனை யழைத்துநின் புவிக்கு
நாக வல்லியுஞ் செந்நெலுந் தருகுவோ நாளை
யேகு கென்றுதன் மனையிடைப் புகுந்தன னிப்பான்
மோக வல்விசூ ராவதற் கிருளிலே மொழிவாள்.

அரிய லிங்கமொன் றெந்தைபா லிருக்குமங் கதனைப்
பரவி யீரெழு பாரையு முடியின்மேற் பரித்தான்
புரவ லன்றனை யிரந்துகொண் டென்பதி புகுந்தாற்
பெரிய வின்பமுஞ் சித்தியு முத்தியும் பெறலாம்.

என்று கூறிஞன் மற்றைநாள் வளவனங் கெழுந்து
சென்று சேடனுக் கோதிஞ னொருபெருஞ் சிறப்பை
யன்று செந்நெலும் வல்லியு மருகனுக் களித்துக்
குன்ற மென்னவே மணிகளு நிதிகளுங் கொடுத்தான்.

அண்ண லேயிஞு மளிப்பதே துனக்கென வறைந்தான்
மண்ணி லேயெனக் கரியன விலையொரு வரமுண்
டெண்ணி லுன்னிடத் திலிங்கமா மிறைவனைப் பூசை
பண்ண வேண்டுமென் றுரைத்தன னனந்தனும் பகர்
[வான்.

எங்கி லேக்கெலா முறைமுறை வழிபடு மிலிங்க
முங்க ளுக்குநான் றருகுவ தன்றென வுரைத்துச்
சங்கை யுற்றுள மெலிந்துதன் மனையிடைச் சார்ந்தான்
கங்கு லிற்றுயில் கனவிலே யிறைவனைக் கண்டான்.

மின்கு லாமுடி யனந்தனுக் குரைசெய்வான் விடையோ
னன்பி னுனைப் போலநின் மருகனு மதிக
வின்ப மேனியொன் றிரண்டுகூ றுகநா மிருப்போம்
பின்பு வேண்டிய தொன்றவற் கருளெனப் பெயர்ந்தான்

புற்ற ராவர சமலனை மகிழ்ந்திருள் புலர்ந்த
மற்றை நாளெழுந் தருச்சனை மனையிலே வந்தா
னற்றை நாளிரு கூறதா யிருந்தன னமல
னுற்ற பாதியை மருகனுக் கருளியொன் றுரைப்பான்.

அகித லத்திலே யிருப்பனூன் மகிதலத் தவனீ
மகளொ ருத்தியிங் குறைவது முறையல மன்னு
தகைப டைக்கலா மரும்பொருள் படைக்கலாந் தருமம்
புகழ்ப டைக்கலா மிவளுடன் புவியைநீ புரந்தால்.

வாழு நாளிலே தனைப்பரித் தவரையும் வருத்தித்
தாழு நாளிலே சரணமென் றவரையே சாரு
மேழை போன்முலை வளருநா ளிடைக்கிட ரிழைத்து
வீழு நாளினுங் காப்பதே கடனென விரித்தான்.

கூர வாளுமொன் றளித்துமின் னுடன்விடை கொ
டுத்தான், சூர வாதவ னனந்தனை யணங்குடன் றெ

மூது, பார கத்திலே யணைந்தரன் கங்கையிற் படிந்து,
வார ணத்துரி புனைந்தவன் சிராமலை வணங்கி. (ாருரு)

மாச கற்றிய கோழிமா நகர்தனின் மன்னி
யீச னைக்கன காலயத் தணிபெற விருத்தி
நாச மற்றதோர் திருவிழா நவங்களா நடத்திப்
பூச னைக்குவேண் டியவெலா முதவினன் புரிந்து

கலிவிருத்தம்.

செந்நெலுடன் வெற்றிலை செறிந்தகொடி யெல்லா
மெந்நிலமு மாகவென வெங்கணும் விளைத்தே
மன்னனுல கத்துயிர் வளர்த்துவரு நாளிற்
பன்னகத லத்திசிவ பத்தியின் மிகுந்தாள். (ாருரு)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அண்ண லிருதா ளருச்சனையைத் தினமுங் கொழுந
னனுமதியாற்
பண்ணி யடிசி லயின்றிடுவ தல்லாற் புனலும்
பருகியிடா
ளண்ணு நியதி தவறாது நடத்தி வருமந்
நாள்களிலே
வண்ண வயிற்று லிலையிலிளங் கருப்பம் பிறைபோல்
வளர்ந்ததுவே. (ாருசா)

கருப்ப முதிர்ந்துந் தவறாதே காலா னடந்து
கயிலை யெனும் [ந்து
பொருப்பின் கொழுந்தி னடிதொழுவா ளொருநா ணட
போம் பொழுது

நெருப்பின் குழவி யெனும்பாலா விளைத்தா ளயர்ந்து
நெடிதுயிர்த்தாள்
விருப்பம் பெருகுஞ் சேடியர்கண் டணைத்தா ரசைத்தார்
விசிறியையே. (ருகஎ)

அன்னங் களிக்கப் பிடிகளிக்க நடந்தா
ளஞ்சா றடியளவு
மின்னு மயர்ந்து மூச்செறிந்து விழுந்தா
ளங்கோர் வெள்ளிடையின்
மன்னன் விடுத்த சிவிகையினு மேறு
டிரும்பி மனைபுகுதா
ளின்னுஞ் சிவனை யிறைஞ்சியலா லயிலேன்
புனலு மென்றாளே. (ருகஅ)

வீர விரத மவள்பிடித்துத் தனையு
மறந்து மெலிவுற்றாள்
சார முனிவன் வனமெனவே தாரா
கிரகஞ் சமைத்தார்க
ளீர வளற்றுச் செங்களப மிறைத்தார்
சொரிந்தா ரிமசலநல்
லார வடங்க ளணிந்தார்கள் படுத்தார்
கமுநீ ரகவிதழே. (ருகக)

அயர்ந்து மடந்தை வருந்துதல்கண் டடியார்க்
கெளிய வருட்கடலுஞ்
சயம்பு வடிவா யவளெதிரே யிருந்தா
னந்தச் சங்கரனே

வயந்த மெனவே கற்பகப்பூ மலரைச்
சொரிந்தார் வானவர்கள்
வியந்து பணிந்து வலம்புரிந்து மீண்டாண்
மனைக்கு மென்கொடியே. (௩௬௰)

சூர வருக்க னதிசயித்துச் சூலிக்
கிரங்குஞ் சூலிதனக்
கார மதிலுங் கோபுரமு மணியா
லயமு மமைப்பித்துத்
தேருஞ் சிறப்புந் திருநாளு மகபூ
சனையுஞ் செய்வித்தான்
வீர விரத முன்போல நடத்தி
வந்தாண் மென்கொடியே. (௩௬௧)

ஈன்றாள் குழவி தனையனுந்தன் குரவன்
றனிலு மெண்மடங்காய்ச்
சான்றாண் மையினு லறநெறியாற் சிவஞாற்
றெளிவாற் றகைபெற்றான்
மூன்றும் பெயரான் முடிவாக நாற்பத்
தாறு முடிமன்னர்
பூன்று குதிசேர் மகுமுடித்து மகவா
னுலகம் புக்கனரே. (௩௬௨)

சூரவாதித்தச்சருக்க முற்றிற்று.

ஆக சருக்கம் ௯-க்கு திருவிருத்தம்-௩௱௬௰௨.

சிவமயம்.

உறையூரழித்த சருக்கம்.

கலிவிருத்தம்.

ஐம்பதாந் தலைமுறை யதனி லேயொரு
வன்பராந் தகனெனு மன்னன் றோன்றினன்
மின்குலா மணிமுடி மன்னர் மேனியிற்
புன்புலா னிணமழை பொழியும் வேலினன். (க)

அவனிரு புயத்தினுக் கமைந்த மான்றிருப்
புவனமா தேவியோ டுலகம் போற்றின
னிவனிலை யிருக்கமு னியம்புமாமுனி
சிவனது பணிவிடை செய்ய லுற்றனன். (உ)

புராந்தகற் கவனல ரொடுக்கும் பொங்கரிற்
பராந்தகற் கணிமலர் பறிக்க வந்தொரு
பிராந்தகன் மலரொலா மெடுத்துப் பெய்துகொண்
டராந்திகழ் வேலினற் கணிய நல்கினன். (ங)

அம்மலர் மன்றலுக் கதிச யித்தனன்
செம்மறன் முடிக்கணி சிறப்பெண் ணுமலே
யிம்மலர் தினந்தரு கென்று கூறினன்
மெய்ம்மலர் வணிகனும் விடைகொண் டேகினன்.

மாலையிற் றுயின்றனன் வனத்தில் வந்திளங்
காலையிற் புதுமலர் கவர்ந்து போயின

னலயத் தினுக்கவை யளிக்கு மாமுனி
சோலையிற் புகுந்தலர்த் தொகையைத் தேடினன்.

இங்கிவை கண்டிலே னெம்மை யாள்பவர்
சங்கரன் முடிமிசைச் சாத்தி னர்களோ
வங்கதை யறிவதற் காக வவ்விடைக்
கொங்கவிழ் சிலமலர் கொண்டு போயினன். (சு)

தானணிந் திடுமல ரன்றிச் சங்கரன்
மேனியிற் கண்டில னழுது விம்மினன்
கானகப் புதுமலர் களையக் காவலன்
றேனகப் புனைந்துதன் றேவிக் கீந்தனன். (எ)

அவ்வலர் பகிர்ந்தவ னளிக்கும் போதினின்
மௌவலுந் திறையிடு முறுவன் மாதரா
ளிவ்வலர் சிவன்றனக் கினிமை யாதலாற்
சைவல வோதியிற் றரிக்க வஞ்சினள். (அ)

காவலர் காவலன் மகிழக் கைதவப்
பூவலர் வாணிப னுதவும் போதினில்
யாவரிவ் வனமதி லெய்தி னரெ
மாவனத் தின்முனி மறைந்து நின்றனன். (கூ)

பத்திர நூறெனப் படைத்த போதினைக்
குத்திர வாணிபன் கொய்யு மெல்லையிற்
கைத்தலம் பிடித்தவன் கழுத்தி லேதன
துத்தரி யந்தனைச் சுருக்கி யுந்தினன். (ய)

முன்பிடித் தீர்த்திடு முனியைத் தள்ளியே
வன்புடைக் கயவனும் வலிதி னெய்தினன்
பின்பிடித் தனனிவன் பின்னு முன்னுமாய்
வன்புடைக் காவலன் மனையி னண்ணினன். (ம௧)

ஆயிரந் தாமுறை யரச வென்றனன்
வாயிலைப் புரப்பவர் வார லென்றனர்
தூயனோ ரந்தண னெறியிற் றோன்றியே
கோயிலுண் முனிவனைக் கொண்டு போயினன். (ம௨)

கலிநிலைத்துறை.

மன்னர் மன்னனு மெதிர்கொடு முனிவனை வணங்கிப்
பொன்னு லாவுநல் லாசனங் கொடுத்தெதிர் புகல்வா
னென்ன புண்ணியஞ் செய்தன னீவரவென்று
னன்னை போலுவா யெவர்க்குநீ புகலிட மன்றோ.

கலிவிருத்தம்.

பாதலத் தினும்புதல் கொணர்ந்து பல்பகல்
பூதலத் தினிற்புனல் பொழிந்து பொங்கரிற்
கோதற வளர்த்தலர் கொய்து தார்செய்து
நாதனுக் கணிகுவே னனு நாளுமே. (ம௪)

அப்புதல் வனத்திடை யளிகள் செல்லினுந்
தப்புத லரிதுமற் றெவருஞ் சார்கிலார்
மெய்ப்புது மலரிவன் கொய்து மேவினு
னிப்புலை யனைத்தடிந் திடுக வென்றனன். (ம௫)

ஆடார வணிபவற் கலங்கல் பெய்திடுங்
கூடையை யரசுவா பறித்துக் கோடனு
மேடவிழ் தொடையெறி பத்த ரென்பவ
ரோடிவெங் கரிமிசை மழுவை யோச்சினர். (௰கூ)

வீழ்ந்தது கடகரி களிற்று வேந்தனுஞ்
சூழ்ந்திது கொடுத்திடு துயர்க்கென் றோளையும்
போழ்ந்திடு கெனச்சொலிப் புளையு மாமுடி
தாழ்ந்தன னதுபெருந் தரும மானதே. (௰எ)

பழுதெனத் தள்ளிய மலரைப் பண்டொரு
முழுமதி முகத்தின ளெடுத்து மோந்தனள்
செழுமலர் தொடுப்பவர் கண்டு சென்றவள்
குழலினைப் பிடித்துமென் குமிழைக் கொய்தனர்.

மங்கைதன் கணவனு மரசன் வந்திவ
ளங்கைமுன் பற்றிய தலனா யாதலாற்
செங்கையைத் தடிந்திவள் வினையைத் தீர்க்கென
வெங்கணு மவன்புக ழிசைக்க வில்லையோ (௰கூ)

புழுச்சுமை மலக்குவை புலவு நாறிய
வழுக்குட லீரல்சீ வழியுஞ் செய்யக
முழுக்குட லுதிரநீர் மூளை யின்பொதி
யழுக்குட லதைப்பொரு ளாக வெண்ணுமோ. (உ௰)

உழுநரிக் கணங்களுக் குதவு மொண்பொருள்
கழுகினுக் குணவுகட் டியக ளஞ்சியந்

தழலினுக் கிந்தன மான சட்டக
மெழிலுறப் புனையினு மிருப்ப தல்லவே. (உக)

நரம்புட னெலும்புதோ லிட்ட புன்குடில்
வரம்பறு பிணியெலா மெடுத்த வான்கலந்
திரங்குத னரையிடர் புதைத்த சிற்றறைக்
குரம்பையென் றறிந்திலை கொற்ற வேந்தனே. (உஉ)

கலிநிலைத்துறை.

கடிகொ ணீலநுண் மணியெனக் கரும்புழுக் கலந்து
பொடிகொ ணித்தில மாலைபோற் றவளவீர் பொருந்தி
வடிகொண் மாவென வவைக்குளே வருந்திடு மயிர்க்கோ
முடிகொள் கங்கையான் விரும்பிய மலனைநீ முடிப்பாய்.

கொச்சகக்கலிப்பா.

எட்பகவு மன்பில்லா ரிவ்வுடலிவ் வாறிருந்தாற்
பெட்புறுவர் பேதைமுதற் பேரிளம்பெண் ணீருக
வுட்புறம்பா வைத்தா லுகிர்ப்பருந்தும் வாயசமு
முட்கழுகுங் கல்யாணம் பண்ண முயன்றிடுமே. (உச)

பௌவநிகர் காலன் பறித்துயிர்கொண் டேகினு
லிவ்வுடல மிந்தனப்பூ மெத்தையின்மே லெய்தியெரி
கௌவும் பொழுது சுடுநாறிக் காட்டுமன்றிச்
செவ்வந்தி மாலைமணங் காட்டுமோ தேர்வேந்தே.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சண்பகத் தயில நீவி யிமசலந்
தலைய வாட்டி

யொண்புகை கொடுத்து நாவி மெழுகித்தா
றுறுத்து மோதி
வெண்புகை நிறுத்து மாய்ந்து வெண்டலை
யான போது
நண்புகை விடாம லிந்த நறுமல
ரணிகு வாயோ. (உசு)

வேறு.

மின்போ லழியும் வயிற்றுமை வடிவா யழியு
மெய்யுருவாய்
முன்போ லழியும் பிறந்தழியு மடவா ருடனே
முயங்கியதன்
பின்போ யழியு நரைத்தழியும் பேய்போற் றிரிந்து
பெயர்ந்தழியும்
பொன்போல் வளர்த்து மிவ்வுடல நிலையா தழிந்து
போய்விடுமே. (உஎ)

கலிவிருத்தம்.

சிவன்றனை யிகழ்ந்தொரு கதையைச் செய்தபேர்
சவம்படு பொழுதவர் தசையை நாடியே
யுவந்துவந் தருந்திய கழுகு மோரியுங்
கவர்ந்தது கசந்தரு வருத்துக் காலுமே. (உஅ)

சிவனது திரவியஞ் சிறிது கொண்டவர்
நவவிதம் படுமெழு நரகு நண்ணுவா
ரவலவெங் குழிகளிற் கிருமி யாகுவார்
குவலயந் தனிலொரு கோடி சன்மமே. (உகூ)

மெய்க்கடுங் கூற்றுவன் படையில் வெம்புவார்
செக்கிடை யரைகுவா ரழலிற் றீகுவார்
துக்கமும் பிணியுமாய்ச் சுழல்வர் சூகரங்
குக்குட மாகுவர் கோடி சன்மமே. (௯௰)

மானிய நிலம்பதி மகமை யென்பதுந்
தானியந் தனமணி தான மென்பது
மேனிறை கோயிலுள் விதித்த பண்டமு
மானுயர் கொடியினு னமிர்து செய்ததும். (௯௧)

தண்டிமுன் கொடுத்திடு தாரு மாரமு
முண்டது முடுத்தது மற்று முள்ளவு
மெண்டரு கோயிலின் புறம்பி லெய்திய
வண்டணி தொடையலுங் கொளார்நன் மாட்சியோர்.

அல்லலை யுடையவ ரழுத கண்ணிர்
செல்வமன் னவர்கெடத் தேய்க்கும் வாளெனச்
சொல்லிய மொழிசெவித் தொளைக்கு ளேபுக
வில்லையோ வுடற்பய னிழந்த மன்னனே. (௯௩)

வாலிபம் பெருநிலக் கிழமை மாண்பொருண்
மேலறி விலாமையி லொன்றி மேவினுஞ்
சீலமுங் குடிமையுஞ் சுதையு மாலிவை
நாலுமுள் ளவர்செய னவில வேண்டுமோ. (௨௪)

விழிதெரிந் திருக்கவுங் குருடு மேவுவர்
மொழிதெரிந் திருக்கவு மூக ராகுவர்

பொழிமது வன்றியு மயக்கம் பூணுவ
ரழிதரு காலமா மரசர் வண்ணமே. (௬௫)

திண்புகழ் படைப்பதும் பகையைத் தேய்ப்பது
மண்புரந் தளிப்பது மன்னர் பேரணி
வெண்கலை மூசுதல் கவரி வீசுதல்
புண்களும் படைத்திடும் புனலு மாடுமே. (௬௬)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அந்தண ரருளைச் சாரா ரரும்பய மறுக்குஞ் சேதா
மந்திர மறப்பர் நூலோ ராதலான் மகமுண் டாகா
விந்திரன் முதலா வுள்ள விமையவ ரவியூண் கொள்ளார்
கந்தரஞ் சிறிது நல்கா காவலன் கொடுமை யாலே.

இன்புடை யறங்க ணல்லோ ரிளையவர் குரவ ராகத்
தன்பெருங் கிளைகள் சுற்ற மந்திரத் தலைவ ராக
மன்பதை கனிக ளாகத் தானைகண் மணிவீ ழாக
வன்பெலாம் வடிவ மாக வரசுமேல் வளரு மன்றோ.

கலிநிலைத்துறை.

தெருண்ட சிந்தனை மன்னவ வீதிநூ றிசையி
னுருண்ட தேரின னென்னுமே விழிகளுண் டுலகின்
மருண்டு மன்னனும் விழியொளி மறைந்திடின் மற்றை
யிரண்டு கண்ணினும் பயனிலை யாகுமே யென்றான்.

கற்பு மங்கையர் நிறையெனும் வரம்பினைக் கடந்தால்
வெற்பு துங்கிட வானகம் புவியின்மேல் விழுந்தா

லற்பு மன்னவன் செய்யகோல் வளைந்திடு மானு
னுற்ப லஞ்செறி மாலையாய் விளக்குவா ருண்டோ.

வேலி யானது பயிரினை நுகர்ந்திட விழைந்தாற்
கால னுருல குயிரெலாங் கவர்ந்திடக் கனன்று
லால மன்னையர் புதல்வருக் கருத்துவ ரானுல்
வேலை வேலையைக் கடக்கிலார் விலக்குவார் வேந்தே.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சிலையின் பிளவு நிலப்பிளவு மணலின் பிளவுஞ் சிறந்தபுனற்
றலையின் பிளவு மெனநான்கு வகையாம் வெகுளி தனையுடையோர்
தொலைவி னுகம் புள்விலங்கு நரராய்ப் பிறந்து துயருழப்பார்
மலையுந் தகர நிழலுடனே மலையுங் களிற்று மன்னவனே. (சுஉ)

கலிநிலைத்துறை.

சொல்லு கின்றவன் றனையிறை தகுதியிற் றெழுது
நல்ல வாசகம் போலவே நகைமொழி நவிற்றி
யல்லில் வேறலர் பறித்தவன் றனையெதி ராக்கி
யில்லை யோவலர் பறித்தியோ சூளுரை யென்றான்.

பூவ ளிப்பவ னுரைசெய்வா னிவர்மொழி பொய்யே
காவை யென்னிரு விழியினுற் கனவிலுங் காணேன்
யாவ ரிப்படி செய்துபோ னுர்களோ வென்று
நாவ ழற்சுட மொழிந்தன னரசனு நவில்வான். (சுசு)

அழிவு காலம தாகையா லலரொடுப் பவனைப்
பொழிலி லேபுகா தகற்றுவோம் போமெனப் புகன்றான்
வழுவி லாமுனி மன்னரோ தக்கனுர் மகம்போற்
புழுதி யாடுமும் மகமுமென் றுரைசெய்து போனான்.
செற்ற மாகவே யிப்படி மொழிதலுஞ் சினந்திட்
டிற்ற மன்னவன் வனத்திலே யொருமல ரின்றி
நித்த நித்தநீ கொண்டுவா வென்றன னிருபன் [டான்.
கொற்ற வேந்தனைப் பணிந்துவா ணிபன்விடை கொண்

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

முடித்திடு மாசர்க் கோர்நாண் முடியாத
பழியுண்டாக
வெடித்தபோ தெல்லா மென்றாம் வெடியாத
போதிற் கொய்தா
னெடுத்தசெவ் வந்திப் போதி னெதிர்படு
நிழலா மென்னக்
கடித்திகழ் விசும்பிற் றாரா கணங்களு
மறைந்த வன்றே. (சஎ)

குரவனு முனிக்கு நாமுன் கொடுத்தசெவ்
வந்தி நாட்போ
தாசனாற் கவரப் பட்ட தெனநினைந்
தரவ வேந்தன்
வரவிடு கனகச் செந்தா மரைப்புது
மலனாப் போலே

யிரவினை யகற்றிக் கீழ்பா லிரவியு
முதயஞ் செய்தான். (சஅ)

கலிநிலைத்துறை.

வண்டு ணூதமு னெடுத்தசெவ் வந்திநாண் மலனாக்
கொண்டு மாமுனி காணவே வணிகனுங் கொடுத்தான்
கண்டு நெஞ்சுநொந் திறைவர்சந் நிதியிலே கலுழ்ந்தான்
பண்டு மாரனை யெரித்தவ ரவனுடன் பகர்வார். (சகூ)

அஞ்ச லஞ்சனீ முனிவனே யவனைநா மழிப்போ
நஞ்ச மன்னவன் றனதுறை யூரிலே நண்ணி
மஞ்சு லாவிய மாளிகை மறுகெலா மருவி
யிஞ்சி சூழுமிந் நகரொழு தினத்திலே யிறக்கும். (ருய)

அரன ருச்சனை புரிகுவோ ரடியரைப் பணிவோர்
குரவர் சொற்படி யொழுகுவோ ரிரந்தது கொடுப்போர்
நரைமு திர்ச்சியோ ரருமறை சிவாகம நவில்வோர்
திருவு டைப்பணி புரிகுவோ ரருமகஞ் செய்வோர்.

துன்று கற்பினர் யாவருங் கேளுமின் சொல்கே
ளின்று தொட்டெழு தினத்திலிப் பதியிறந் தேகு
மன்றி லுற்றவ ராணையாற் சொரியுமண் மாரி
யன்ற டுக்கழி வாகிய வேந்தனு மழிவான். (ருஉ)

சுற்ற மோடவன் ருனையுங் கயவருந் தொலைவா
ரிற்றை நாளிது சிவனுப தேசமென் றெவர்க்குஞ்
சொற்று வாவென வுரைசெய்தார் முனிவனுந் தொழுது
மற்றை நாளுறை யூரிலே யுரைத்தனன் மறுகில்.

தூய ரானவ ரக்கண மேசெலத் துணிந்தார்
தீய ரானவ ரசங்கதி யாடியிற் செறிந்தார்
தாய ராமென வருள்செயுஞ் சிராமலைத் தலைவர்
வாயு வோடெழு முகிலையும் வரவழைத் துரைப்பார்.

சந்த நான்மறை முனிவனை யிகழ்ந்தவன் றருஞ்செவ்
வந்தி நாண்மலர்த் தொடையலும் புனைந்திடு மன்னன்
பந்த மாகிய கிளைகளோ டழிந்திடப் பதியும்
விந்த மாமென மறைத்திடு மெனச்சொலி விடுத்தார்.

தாமு மந்நகர்க் கெதிர்முக மாகிமுற் றலத்துக்
கேம மாகவே புறங்கொடுத் திருந்தன ரிப்பான்
மாமு கிற்கண மிடித்ததிர்ந் தெழுந்துமண் மழையைத்
திமு கங்களா லிறைத்தன புனலையுஞ் சிதறி. (ருசு)

சண்ட மாருதஞ் சுழன்றுறை யூரொலாஞ் சலியா [துக்
வெண்டி சாமுகந் திரிந்திட வொன்றிலொன் றெடுத்
கொண்டு கீழ்விழ வெறிந்தன பலபல குவையாய்
மண்டி ரண்டன மலைபெருங் குழவிகண் மான. (ருஎ)

கூற்ற மன்னவன் றீவினை விளைத்திடுங் கோழி
யேற்ற டைந்துபல் குழிகளா யுயர்ந்தது கிழக்கிற்
காற்று வந்துதன் கரங்களாற் கீழ்நிலங் களைய
வேற்று மண்களைச் சொரிந்தன போன்றன மேகம்.

மாட மாளிகை மறைந்தன மறைந்தன மணித்தே
ராட ரங்கெலாம் புதைந்தன புதைந்தன வகங்கள்
கூட கோபுரங் காந்தன காந்தன குளங்கண்
மேடு பட்டன காவுட னுவண வீதி. (ருகூ)

அந்த மாமுனி யுரைத்ததை யசங்கதி யாடி
யிந்த வாருயி ரிழந்தன மெனக்கரைந் திடுவார்
தந்தை தாயருக் கிரங்குவார் கலுழுவார் தளர்வார்
மைந்த ரானவர்க் குருகுவா ராயினர் மாக்கள். (சுடு)

மழைத னக்கிடு குடையெனக் குழவியான் மறைப்பார்
தழைசெ விப்புகர் முகமத மருப்பிணைத் தந்தி
புழைப ரப்பிய வாயிடைச் சிலர்சிலர் புகுவா
ரழலி றைத்திடு புயலினுக் கஞ்சுவா ரானார். (சுக)

ஒருவ ருக்கிடை யொருவர்வந் தொளித்தொளித் தொ
துங்கிப், பரிவ ருத்தனை பண்ணிடு மவரெனப் பயில்
வார், வெருவி யக்கண நிலவறை செயச்சிலர் விரைவார்,
புரமெ ரித்திடு பொழுதினி லவுணரைப் போன்றார்.

பாவி மன்னவன் றன்னகர் படுந்துயர் பார்த்துத்
தேவி தன்னுடன் பரியின்மேற் குடதிசைச் சென்றான்
மேவு மவ்விடந் தன்னினு மண்மழை விழுந்த
வாவி கொண்டவன் வடதிசைக் காவிரி யடைந்தான்.

சென்னி யவ்விடைத் திரும்பவு மவன்பெருந் தேவி
தன்ன தாகிய கருப்பமெய் முதிர்ந்திடுந் தளர்வாற்
பொன்னி யாற்றிடை விழுந்தனள் புலையரிற் புலைய
னென்னு மன்னவன் றிரும்பிவந் தவளையு மெடாமல்.

உயிர்பி ழைத்திடி லேதுவிற் றேனுமுண் பாமென்
செயிரி ழைத்தசொற் படியவன் விரைவுடன் சென்று

னயிர்கொ ழித்திடு காவிரிக் கரைபுகு மளவிற்
றுயர்பு டைத்துநொந் தவனொடு வீழ்ந்தது துரகம்.

மாவு மன்னனு மறைந்திடப் பொழிந்தமண் மாரி
காவி னின்றகண் மலரெலாம் பறித்துமுன் கவர்ந்த
பாவி யென்றிவன் விருப்பமா னதுகெடும் படிக்குப்
பூவி னுன்மறைத் திடுவது போன்றன புயல்கள். (சுசு)

பிறைமு டித்தவர் முனிவினு லயிர்மழை பெய்த
தறையி லித்தனை யாயிரத் தலமென வறியு
முறைக ளிட்டன போன்றிருந் தனவுறை யூரிற்
குறைய றத்திசை திசையெலா நிறைந்தமட் குவைகள்.

கண்ணி னுலருட் பெருமழை பொழிந்திடுங் கடவுண்
மண்ணி னுன்மழை பொழிந்திடு முகிலினை மாற்றிப்
புண்ணி யஞ்செயா வளவனு ரழித்தது போதும்
விண்ணி லேகுமென் றுரைத்தனன் மறைந்தன மேகம்.

கலிவிருத்தம்.

வன்னி வண்ணர் மலரை முடித்திடுஞ்
சென்னி பட்ட திறமுறை செய்தனம்
பொன்னி யாறு பொகுந்திடர் மூழ்கிய
கன்னி மாதின் கதையை விளம்புவாம். (சுகூ)

கலிநிலைத்துறை.

மேனி றைந்தெழ வருந்தியும் புனலிடை வீழ்ந்துஞ்
சூனி றைந்துகொண் டிரும்புனற் சுழிகளிற் சுழன்று

மானி றைந்திடு கொடியவர் திருவரு ளாலே
தானி றந்தில னொழுகின னணுகின னடத்தை. (எ௰)

கனையி லேயருந் தவம்புரி பவனருட் கண்ணன்
பிரம மாநதி யென்பவன் குலத்தினும் பெரியோ
னரிவை யவ்விடை வருதல்கண் டெடுத்தன னவடன்
றெருமருந்துய ரகற்றினை னடைவிலே தேற்றி. (எக)

தந்தை யானுன தச்சமுந் தளர்ச்சியுந் தவிர்வா
யெந்த வூரெவன் றேவியுன் னுமம்பா தென்று
னந்த ணளனே யன்னையே யத்தனே யருளே
யெங்கை யேயுனக் கடைக்கல மடைக்கல மென்றுள்.

திரிசி ராமலை யிறையவர் திருவுளஞ் சிதைத்த
புரவ லன்னுயிர்த் தேவியான் புவனமா தேவி [ன்
சொரியு மண்மழைக் கச்சமாய் மனுகுலந் தொலைத்தோ
குரக தந்தனை யுதைத்தன னென்னையுங் கொண்டு.

அச்ச மாய்விழுந் தாற்றிலே மிதந்துனை யடைந்தேன்
கச்சு வார்கழ லரசனெவ் விடத்தனோ காணே
னெச்ச மானது வேண்டுமிக் குலத்தினுக் கென்று
பிச்சி யாகியு முயிர்சுமந் திருந்தனன் பிழைத்து. (எச)

ஐய வென்றமு துரைத்தன ளந்தண னவளைப்
பைய வேகொடு சென்றுபோய்ப் புகுந்துதன் பதியின்
மையில் கற்புடை மனைவியோ டுரைத்தனன் வனத்திற்
றையல் வந்தது மவளது பெருமையுந் தகவும். (எரு)

கலிவிருத்தம்.

கருப்பமா னதுநிறை கமலச் சீதையை
விருப்பமாய் வளர்த்தவான் மீகர் போலவே
யருப்பமுங் குறைவிலா தமிர்த நன்புன
றருப்பண நிகர்மணித் தாம மாலிகை. (எசு)

சந்தன மிமசலம் பளிதந் தண்மலர்
கந்துக மம்மனை கழங்கு பைங்கிளி
சுந்தர வோதிமந் தோழி மார்களுந்
தந்தன னவளது தளர்ச்சி நீங்கவே. (எஎ)

இன்புட னிப்படி யிருக்கு நாளிலே
பொன்பது திங்களு நிறைந்த தொள்ளிழை
தன்புடை மருத்துவத் தலைமை மாதரை
யன்புட னமைத்தன னகன்றி டாமலே. (எஅ)

பூரண கருப்பமாய்ப் பொறையு யிர்த்திடுஞ்
சீரிய தினத்திலோர் முனிவன் சேர்ந்தன
ஞோரையுங் கரணமும் யோக முஞ்செறி
வாரமு நன்மையாய் வருதல் கண்டனன். (எகூ)

திரிபுவ னப்பெருந் தேவி யேயின
மொருகடி கையிற்பொறை யுயிர்த்தி டாதுகொள்
பெருநல மெனச்சொலிப் பெயர்ந்து போயின
னரிவையுஞ் சரணமே லாக நின்றனள். (அ0)

முற்றிழை முனிசொலு முகுர்த்தந் தன்னிலே
பெற்றனள் குழவியைப் பிறையை நேரென

நித்தமும் வளர்ந்தது நிதியுஞ் சாதக
முற்றிடு தினத்தினி லோலை தீட்டினர் (அக)

ஈண்டுதன் ருயுட னிருந்த கோமக
ஞண்டொரு நான்குசென் றழகின் வீறினன்
றாண்டிய பெரும்புகழ்ச் சோழ மண்டலங்
காண்டக வெங்கணுங் கான மானதே. (அஉ)

அன்புடைச் சாரமா முனியு மத்தலந்
தன்பொருட் டாகவே யிறந்த தன்மையால்
வன்புடைக் காவலன் மந்தி ரிக்குழா
மின்பமுற் றுறையுமவ் விடத்தி லெய்தின. (அங)

தொல்லையி னமைச்சரோ சோழ மண்டலம்
புல்விதா யிப்படிப் போத னீதியோ
வல்லிய முயர்த்தவன் மரபிற் றேன்றினே
ரில்லையோ தேருமி னென்று கூறினன். (அச)

அமைச்சருந் திருவுள மாகி லையனே
யுமைக்கிறை யருளின லுலக மேழையுஞ்
சுமக்குநல் லொருவனைச் சோழன் றேன்றலை
யிமைக்குமுன் கொணருவோ மென்று கூறினர். (அரு)

காவலன் காவிரி கடக்குங் காலையிற்
றேவியும் புனலிடை வீழ்ந்து தீரமுற்
ருவியோ டிருந்தன ளறிமி னென்றனன்
யாவரும் புகழ்முனி யிருக்கை யெய்தினன். (அசா)

சட்பதங் குடைமதத் தறுகண் யானையைக்
கட்படம் புனைந்துதண் கரையி னேகெனக்
கொட்புற விடினது கொணரு மென்றுதம்
முட்கலந் தமைச்சர்க ளொருமித் தேகினர். (அஎ)

முனிவனுக் கிவையெலா மொழிகு வாமெனத்
துனைவொடுஞ் சென்றுதங் கருத்தைச் சொல்லின
ரனைவரு முயலுமென் றருளி னனவர்
கனைகளிற் றினைவிழி கட்டி யேவினர். (அஅ)

அரசிப நடந்துல கனைத்துந் தேடியே
கரைபொரு காவிரிக் கரையிற் சண்பக
மருமலி திருநில மருங்கிற் சென்றது
திருமகன் சிதைத்தனன் சிற்றி லவ்விடை. (அகூ)

சிறுமகா ருடனவன் சிதைக்குஞ் சிற்றிலின்
மறுவறு கடகரி வந்து முன்பணிந்
திறைமகன் றனைக்காத் தெடுக்க லுற்றது
குறுமகா ரனைவரு மிரிந்து கூவினர். (கூ0)

தாயனை யடைந்துநின் றனையன் றன்னைவந்
தாயிருங் களிறெடுத் தசைத்த தென்றனர்
வாயினி லறைந்துகை வயிற்றில் வைத்தவ
டேயவந் தணனுடன் றெழுது சொல்லினள். (கூக)

அந்தண னவ்விடை யணுகு மெல்லையிற்
றந்தியுந் துதிக்கரஞ் சலித்து நின்றது

சிந்தையி னுணர்ந்திறை தேவி யேகரி
யிந்தன மிவன்பதத் தெழுது கென்றனன். (௯௨)

சீறினள் பதத்தினிற் கிரியி னுச்சியி
னேறிய கதிரென வெடுத்த தொண்கரி
வீறிய மத்தக மிசையிற் றோன்றினன்
றேறினள் சிவன்செய லென்று தேவியே. (௯௩)

திருநல மறையவர் மலரைச் சிந்தின
ரருமறை யந்தண னாசி கூறின
னொருகரிக் கோடுகி ழிருந்த வுள்ளடி
யிருகரிக் கோடுமே லிருக்க வுற்றதே. (௯௪)

உன்னத மதகரி யுவந்து சென்றருண்
மன்னிய திரிசிரா மலைக்கொ ழுந்தனார்
சந்நிதி முன்னரா தரிக்க வைத்தது
சென்னிதன் சென்னியின் முடியைச் சேர்த்தினார்.

மந்திரக் கிழவருங் கிளையின் மாந்தருந்
தந்திரத் தலைவருந் தானை மாக்களுஞ்
சுந்தரத் துணைவரு முறுதிச் சுற்றமும்
வந்துடன் வளைந்தன வாரிபோலவே. (௯௬)

கழைச்சிலை யிவன்கரி காலச் சோழனென்
றழைத்தனர் கடமையு மாறி லொன்றுகொண்
டொழித்தனன் றுயரெலா முலகம் யாவையும்
பிழைத்தன பகைமையும் பிணியு மற்றவே. (௯௭)

கடலெனுங் காவிரிக் கரையுங் கட்டிமுன்
செடிபடு தென்கரைச் சிவாலயங்களும்
வடகரை வாய்த்தலை வயலு மாக்கினன்
படவரா வின்முடிப் பார நீக்கினன். (கூஅ)

சோனுஞ் செழியனுந் திறைய ளந்திட
வீரனிப் படிபடி புரக்கும் வேலையிற்
சாரனென் பவன்புரி தவத்தி னன்மகிழ்ந்
தாரணந் தொழுமவ னருளி னெய்தினன். (கூகூ)

வரமுனி வணங்கினன் வரங்கள் யாவையுந்
தருகுவ முரையெனச் சாரன் கூறுவா
னருமலர் திருமதி யாற ணிந்தவா
பாகதி பெறவருள் பாலி யென்றனன். (ள)

இக்கதை விரும்பினே ரெவர்க ளுங்கதி
புக்குறை யவும்வரம் பொழிக வென்றனன்
றக்கதென் றருண்மிகு சார மாமுனிக்
கக்கணஞ் சிவபத மருளிப் போயினன். (ளக)

முனிவனை வழுத்தினர் முனிவர் யாவரும்
புனிதன திணையடி புகழு மெந்தையே
யினியொரு கதையையு மியம்பு கென்றனர்
கனியொடு மயிர்தொடுங் கலந்து கூறுவான். (ளஉ)

உறையூரழித்தசருக்க
முற்றிற்று.

ஆக சருக்கம் ௰-க்கு திருவிருத்தம். சாகூ௰அ.

சிவமயம்.

தாயான சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தோளை நெருக்கிக் கிளர்ந்திடையாற் சுமக்க
வரிதாய்ப் பகிரண்ட
கோள மளவுங் குவிமுலையார் திருமே
னியிற்செய் குங்குமமும்
வேளை முனிந்த வருந்தவத்தோர் மனத்தைத்
திருகு மெல்லோதிப்
பாளை மணமும் பரிமளிக்கும் பதிகா
விரிப்பூம் பட்டினமே. (க)

நச்சோ திமமுந் தொழுநடையார் நயனு
யுதமு னடைந்தோரைத்
தைச்சோ டையிலே கழுநீருஞ் செந்தா
மரையுந் தவம்புரிய
மைச்சோ லையிலே விளையாடிக் குமிழ்மேற்
றிரும்பி வள்ளைசெறி
பச்சோ லையிலே மையெழுதும் பதிகா
விரிப்பூம் பட்டினமே. (உ)

கலிநிலைத்துறை.

மாவிரிக்கும் பொழில்கள்சிலை மதனு ரிகளும் வயப்ப
ரியும், பூவிரிக்கு நெடுங்கணையு மொழியா தளிக்கும்

பொன்னகரங், காவிரிக்கு வடபாலாய் மகரா லயத்தின்
கரையதுவாய்ப், பாவிரிக்கும் புகழ்படைத்த பதிகா வி
ரிப்பூம் பட்டினமே. (கூ)

வேறு.

ஏட விழ்ந்ததார்ப் பேதையர் மணல்களி லிழைத்த
வீட ழிந்திடப் பொருந்திரை நிரைகளை வெகுண்டு
கூடி நின்றுநின் றரியநித் திலமணி கொண்டு
நாடி வேலையைத் தூர்த்திடுஞ் செழும்புகார் நகரம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

காளைய ருடனே காமக் கள்ளுண்டு
களித்த மாதர்
தோளினிற் பரித்த முத்தத் தொகையணி
தூரவி னோடே
நீளர மியத்தி னின்றும விரைவுட
னெருங்கி வீழ்தன்
மீளவுங் கடலின் மீதே விளைந்திட
வித்தல் போலும். (ரு)

முற்றிழை மடவார் சூடிக் கடித்துவீழ்
முல்லை மாலை
சுற்றிய திரையா லாழிச் சுழியிடை
யுலவுந் தோற்றங்
கற்றிரள் வரையாற் றேவ ரமிர்தினைக்
கடைந்த போதி

னற்றெழுந் தலையிற் ரேன்று மாவுரி
  யென்ன லாமே. (சு)

கலிநிலைத்துறை.

சிவன ருட்பெறு மியற்பகை நாயனுர் சிறப்பா
லவத ரித்தது மன்றியே பிள்ளைவந் தருளத்
தவமி ழைத்தமா நகரமூன் ருங்குடித் தலைவர்
நவநி திக்கெலாம் பிறப்பிடஞ் செழும்புகார் நகரம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அத்திரு நகரில் வாழு மாதன
  குத்த னென்னும்
பித்திகை யலங்கன் மார்பன் பெருங்குடி
  வணிக னென்பான்
றத்தையே யனைய தேவி தன்னுடன்
  செருக்கு நாளிற்
புத்திர செல்வம் வேண்டிப் புரிந்தன
  னிறைவர் பூசை. (அ)

மதலையைப் பெறமுன் னுளில் வரமிலா
  நிலைமை யாலே
புதல்வியைப் பயந்தா னந்தப் புதல்வியுந்
  தவழ்ந்து நின்று
குதலையுந் தெளிந்து பொன்னங் கொம்புபோல்
  வளர்ந்தாண் மார்பிற்

றிதலையங் குரும்பை தோன்றிற் றனங்களுந்
திறையிட் டானே. (௯)

அத்தனு மகட்குத் தன்பே ரளித்தன
னதன்பின் னுகச்
சித்திர மயிலன் னுளைத் திரிசிரா
மலையில் வாழு
மெய்த்தந குத்த னென்னும் பெருங்குடி
வணிகன் வேட்டான்
மத்தகக் களிற்றேன் மானே யளகையான்
வனைந்த தென்ன. (௰)

கலிவிருத்தம்.

அரதந பாலனன் களித்த வன்னமும்
விரிதந குத்தனு மிரதி வேட்டையிற்
பொருதன ரிளமுலைப் பூத ரங்களு
மிருபுய மலைகளு மெதிர்பு நின்றன. (௰௧)

குருகின நெரிதரக் குவளை சேப்புற
விருவரு முறைமுறை யிலவ வாயிதழ்
பருகினர் மெழுகெனப் பசும்ப தத்திலே
யுருகினர் கனாந்திரண் டுயிரொன் றாயினர் (௰௨)

இரதியு மதனனு மியைந்த வாறெனச்
சுரதமும் புலவியுந் துணிவு மெய்துநாண்
மருகனுந் தன்பதி மருவ வேண்டுமென்
றரதந பாலனுக் கறிவித் தானரோ. (௰௩)

மணிமுத லியபல வளித்து மாதுல
னிணைமலர்க் கரமெடுத் தேகு கென்றனன்
றுணைவிதன் வருத்தமுந் துயரு மாற்றியே
வணிகனுந் திரிசிரா மலையி லெய்தினான். (௰௪)

எய்தியங் கிருவரு மியைந்து நல்லறஞ்
செய்தன ரிளங்கொடி திரிசி ராமலை
மெய்யனை யன்பினால் வெள்ளி நாடொறுங்
கைதொழப் புகுந்தனள் கணவ னேவலால் (௰௫)

இருவரு மிப்படி யியங்கு நாளிலே
யரதந பாலனு மிறுதி யாயினா
னுருகிய கிளைஞரிங் கோலை யேவினார்
மருகனு மங்கையுங் கண்டு மாழ்கினார். (௰௬)

தீயுறு மயிலெனத் திரியுந் திண்கலை
பாயிளம் பிணையெனப் பதைக்கும் பைந்தொடித்
தாயனை நினைந்துகுந் தனித்தி போவெனா
மாயிரந் தாரையா வழுது விம்முமே. (௰௭)

முலைகளும் விழிசொரி புனலின் மூழ்கின
வலைதரு புனலிடை யணங்கு மூழ்கினா
ளுலையுறு மெழுகென வுருகி னாளவள்
கலைகளுஞ் சொரிந்தன கண்ணி னீரையே. (௰௮)

மங்கையை மகிழ்நனு மார்பிற் புல்கியும்
பங்கய மலர்க்கரம் பற்றி நல்கியுஞ்

செங்கய லொழுகுநித் திலங்கண் மாற்றினு
னங்கவ ளடைவிலே துயரு மாற்றினுள். (௰௯)

சீரிய விரதமும் விருந்துஞ் செய்கையு
மூரிய லாண்மையு மொழுகு நாளிலே
வாரியிற் கவுத்துவ மணியை நேரெனக்
காரிகை வயிற்றிளங் கருப்ப முற்றதே. (௨௰)

சூனிறைந் ததுவரி தொய்யி னீங்கின
பானிறம் படைத்தது குமுதம் பங்கய
மேனிகழ் சுரும்பென முலைக்கண் வீறின
வானிடை வயங்கிய துரோம வல்லியே. (௨௧)

அன்னையு மகள்செய லறிய வேண்டுமென்
றுன்னின ளப்பொழு துவரி நீரயின்
மின்னுயிர் பெருமுகி ருனை வீழ்ந்தன
பொன்னியு மிருகனா புரண்டு வந்ததே. (௨௨)

ஆறது தடையினு லன்னை யேகுதன்
மாறின ளரதந வதிய றிந்திலள்
பேறுடு பிறந்தகம் பெரிதுஞ் செய்திடக்
கூறரும் பொருளெலாங் கொண்டு செல்லுமே.

பூனையின் சுமையெனக் குழல்பொ லிந்திடப்
பானையங் குழலிதழ்ப் பவளச் சேடியர்
தோளையு மணந்துவெண் டுகிலை மேற்கொடு
நாளைவந் திடுமல் தின்று நண்ணுமே. (௨௪)

எதிர்நடந் தன்னையை யிறுகப் புல்லுவோங்
கதிநடந் திளைத்தசெங் கமலம் பற்றுவோ
மதிமுக வெயர்வெலா மாற்று வோமென
வதிசய வுணர்வினு லனைத்து மெண்ணினுள்.

மின்றிகழ் மருங்குலா ணினையும் வேலையிற்
றென்றிசை விளங்கிய தேவர் நாயகன்
குன்றெனு நெடுஞ்சிலை கொண்ட நாயகன்
மன்றலங் கருங்குழன் மடந்தை நாயகன். (உசு)

கலிநிலைத்துறை.

சங்க ரன்சிவன் சதாசிவ னீசனீ சானன்
புங்க வன்றிரி புராந்தகன் புராதனன் புராணன்
கங்கை நாயகன் கறைமிடற் றிறைநுதற் கண்ணு
னெங்க ளுயக னிராமயன் சிராமலை யிறைவன்.

பூர ணன்பரன் பராபரன் வெள்ளியம் பொருப்பன்
கார ணன்மத னுந்தகன் காலனைக் கடிந்தோன்
வார ணந்தனை யுரித்தவன் மறைப்பொருள் வகுத்தோ
னுர ணன்றனக் கரியவன் சிராமலை நாதன். (உஅ)

முடித்த வெண்பிறை நிகரென வளைந்திடு முதுகி
லடுத்த வெண்ணிலா வளைந்தபோ னரைக்குழ லசையத்
திடத்தி னுருவடத்துவோ மெனவொரு செங்கோல்
பிடித்த வாறென வேணுதண் டங்கையிற் பிறங்க. ()

எட விழ்ந்தபூங் குழலிதன் விரதநன் றெனக்கொண்
டாடு மாறெனத் திருமுக மண்டல மசையச்

சூடு கங்கையின் றிவலைபோ னுதல்வெயர் துளிக்க
நீடு கொன்றைபோ லொருபணி களத்திடை நிகழ.

நின்று நின்றுசென் றிளைப்புற நெடிதுழூச் செறிய வொன்று செங்கையிற் கழையின்மே லுடலெலா மொடுக்கிக், கன்று மானையு மழுவையும் விடையையுங் கரந்து, மன்றி லாடலு மொழிந்தவ ளன்னைபோல் வந்தான். (௩௧)

காய பண்டமு மெண்ணெயின் கலசமுங் கனகத்
தூய முத்தணி கலன்களும் விலையிலாத் துகிலு
மேய மங்கைய ரிருவர்மேற் சுமைகளா வெடுப்ப
மாய வன்றனக் கரியவ னெளியனாய் வந்தான். (௩௨)

தூர வந்திடு மவளையீன் றவளெனத் துணிந்தாள்
சேர வந்திடும் பொழுதினி லெழுந்தெதிர் சென்று
பார வந்தனை புரிந்திரு பதங்களிற் பணிந்தா
ளார வந்திரு கரங்களாற் றழுவின ளன்னை. (௩௩)

மோந்து கொண்டன ளுச்சியை மோந்தனண் முகத்தைக், காந்த ளுந்தொழுங் கரங்களை யழுத்தினள் கண்ணிற், பாய்ந்த கண்ணினீர் புலர்ந்திட வருண்மொழி பகர்ந்து, சாய்ந்த கொம்புநேர் மகளுட னிருந்தன டவிசில். (௩௪)

எண்ணி லாவருங் காயபண் டங்களா மெவையும்
வண்ண மேகலைப் பேழையுங் கொணர்ந்தமங் கையருக்

குண்ணு நீர்முத லளித்தநல் லடிசிலு முதவிக்
கண்ணே நேசொனுந் தாயுட னிருந்தனள் களித்து. (௩௫)

மற்றை நாளிலே யுதரநொந் தழுங்கின மகளேப்
பெற்ற தாயெடுத் தணைத்துமேற் றயிலமும் பெய்து
முற்று மன்பினன் மருத்துவத் தொழிலெலா முடித்
தாள், குற்ற மொன்றிலா மடந்தையும் பயந்தனள்
குழவி. (௩௬)

குழவி யீன்றவட் கருமருந் தெண்ணெயுங் கொடுத்
தே, யெழுதி னத்தள விழைத்திடுஞ் செயலெலா மிய
ற்றி, யழகு தொட்டிலுட் டயிற்றியங் கொருமதி யள
வா,மழக விற்றினே முருகவே ளெனும்படி வளர்த்தாள்.

சிதலே சிற்றெறும் பிளஞ்சினே சிலேயினுட் டேரை
பதக மானிட ரிமையவ ரிந்திரன் பதுமன்
முதலி னோர்தமை வளர்த்தரு ளிறையெதிர் முகமாய்
மதலே யொன்றினே வளர்த்தது புதுமையோ மறையீர்.

மையு லாமழைக் கருமுகிற் படத்தினே மாற்றித்
துய்ய வெண்முகிற் படமெனும் விதானம்வான் றுலக்
கிற், றைய நுண்ணிடை யாதந வதியையங் கறியப்,
பைய வந்தன ளவளேமெய் யாகமுன் பயந்தாள். (௩௧)

மாது லன்பெருந் தேவிதன் மனேயிடை வருதல்
காத லன்பினற் பெருந்தந குத்தனுங் கண்டா

னேதி லார்களிவ் விருவரில் யாவரோ வென்று
ஞேது முன்னவள் புகுந்தனண் மடநலா ளுறையுள்.

முன்னர் வந்திருந் தருளிய தாயெதிர் முகமாய்ப்
பின்னர் வந்ததா யிருந்தன ளதிசயம் பிறந்த
தன்னை யாவளென் றாதந வதிமருண் டணைந்தாண்
மின்னை நேரொன விசும்பிலே மறைந்தனன் விமலன்.()

உந்தி யாறணி சடையிளம் பிறைதனக் குறவுத்
தொந்த முண்டென வருமதி போற்குடை துலங்க
விந்த மண்டல மிந்துமண் டலமென விறங்கி
வந்த தாரகைக் கணமெனச் சொரிந்திட மலர்கள்.(சஉ)

தேடி யோதிமம் பறந்திட விரிந்தவெண் சிறை
போன், மாடி ரண்டினு மசைந்தன சாமரை வயங்கத்,
தோடு சேர்குழை மருவிய தும்புரு விசைகொண், டா
டு பாம்பென வாலவட் டங்கணின் றசைய. (சங)

அந்த ரத்திலோ ரிருபது விற்கிடை யளவின்
மந்த ரப்பெருஞ் சிகரிமேல் வருமணி மலைபோற்
சுந்த ரத்தொளிர் விடையின்மேற் றோன்றினன் றோ
ன்ற,விந்தி ரப்பெய ருடையவன் முதலினோ ரிறைஞ்ச.

தேவ துந்துபி முழங்கின முழங்கின சின்ன
மாவ லம்புரி யொலித்தன வொலித்தன மதங்க
மூவ ரோடுமுப் பதின்மரு முனிவரு முளரிப்
பூவை நேர்சொலு மிருகரங் குவித்தெதிர் போற்ற.

தொல்லை யாகம நான்மறை யெதிரெதிர் துதிக்க
வல்வி நாண்மலர்க் கடவுளு மம்புய மனையின்
வல்லி நாதனு நடந்திரு புடையினும் வணங்க
மெல்ல மெல்லவே யுவந்துகைத் தருளினன் விடையை

வேத வேள்வியந் தணர்கள்பா சுபதர்மா விரத
ராதி சைவர்க ளாதியா வாலய மமைப்போர்
காத லங்கெழுத் துளைப்பவ ரனைவருங் காணப்
பூத நாயக னுடன்றிருக் கோயிலுட் புகுந்தான். (சஎ)

நாயி னுங்கடை யானவ ராயினு நயந்தாற்
சேயி னும்பரி வாகவந் தருள்செயுஞ் சிவனை
யாயி ரம்பெய ருடையவண் ணலையுல கனைத்துந்
தாயி னல்லவ னல்லவ னென்றன தழைக்க. (சஅ)

கலிவிருத்தம்.

மாதந குத்தனு மனைம டந்தையு
மேதமில் கிளைஞரு மிமய நாயகி
நாதனை யனுதினம் பணிந்து நாரணன்
வேதனு மறிவரும் பதத்தின் மேவினர். (சகூ)

சத்திய மிதுவெனச் சாற்றி னன்முனி
பத்திகொ டனைவரும் பரவிக் கூறுவா
ரித்தல மிதையதே விதனில் வைகுவார்
முத்தியை யடைவது மொழிய வேண்டுமோ.

வே று.

வைய மின்புற மாதர்கற் போங்குக
செய்ய கோலே யரசன் செலுத்துக
பெய்க வானஞ் சிவாலயம் பீடுற
சைவ மென்னுஞ் சமயந் தழைக்கவே. (௫௧)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இனிய விந்தக் கதையினென்று படித்தபேரு
மெழுதினரு மிருசெவியி லேற்ற பேரு
மனையிடத்தி லுபசரித்து வைத்தபேரும்
வாசிப்போர்க் குறையுளுண்டி வழங்கி னோருந்
தனமிகுதி நெடுவாழ்க்கை யடைவர்நல்ல
தனையரையும் பெறுவர்சிவ பதமுஞ் சார்வ
ரனவரதா தரவுமுறு தலகைசோர
தருளுறுமிம் முறையிருந்த வகத்திற் றுனே.

தாயானசருக்க முற்றிற்று.

ஆக சருக்கம் ௰௧-க்கு திருவிருத்தம் ௬௱௫௰.

செவ்வந்திப்புராணம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫	க	க	எலிக்க	எலிக்
௬	௮	உ	கோசிகன்	கௌசிகன்
௭	௯	உ	கேதமிலா	கோதமிலா
௯	உக	உ	ணடத்திடு	ணடாத்திடு
௰க	உ௫	உ	பொரி	பொறி
உ௩	௩க	௩	வாகரங்	வானரங்
௩க	உஉ	உ	நிறைத்திரு	நிறைந்திரு
௩உ	உ௮	க	அந்தகந்	அந்நகந்
௩௫	௩௬	உ	விழ்தலி	வீழ்தலி
௩௯	க௩	க	வச்சிரத்தனை	வச்சிரத்தினை
௩௯	க௪	௪	வேரற	வேறற
௪௬	௩௰	௪	சலந்தனர்	கலந்தனர்
௪௮	௩	௩	திரசிரா	திரிசிரா
௪௯	௭	உ	மேனி	மேணி
௪௯	௰	க	கன்னி	கழனி
௫உ	௩	க	கலந்தனை	கவந்தனை
௫உ	௪	உ	பொமுகவ்	பொழுதவ்

பிழை திருத்தம்.

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫௩	௮	௨	உகவு	உதவு
௫௪	௧௨	௪	யகிலண்ட	யகிலாண்ட
௫௭	௫	௧	தெறகி	தெற்கி
௬௭	௨௩	௪	விங்கட	விக்கட
௬௯	௩௧	௨	ஞசலத்தி	ஞசனத்தி
௭௫	௬௧	௩	விரிசதிர்	விரிகதிர்
௮௪	௱௰	௧	வளனு	வளவனு
௮௫	௱௰௩	௧	ராதர	ராதன
௮௭	௱௨௪	௪	சூராவதற்	சூராதவற்
௯௮	௩௪	௨	லொன்றி	லொன்று
௯௮	௩௪	௩	சுதையு	சிதையு
௱	௪௰	௪	விளக்கு	விலக்கு
௱௩	௫௭	௪	பெருங்	பெறுங்
௱௫	௬௯	௩	பொகு	புகு
௱௮	௮௩	௪	லெய்திஞ	லெய்திஞன்